# குழந்தை நல காவல் அலுவலர்களுக்கான தகவல் திரட்டு (கேள்வி - பதில் வடிவில்)

சென்னை உயர்நீதிமன்றத்தின் இளஞ்சிறார் நீதிமுறை குழுமத்தின் வழிகாட்டுதலில்

## குழந்தைகளுக்கு பாதுகாப்பான தமிழகத்தினை உறுதி செய்திடும் குழந்தை நேய காவல் பணி

டிசம்பர் 2017

பேரா. ஆண்ட்ரு சேசுராஜ். ம




குழந்தை நல காவல் அலுவலர்களுக்கான தகவல் திரட்டினை
2017 டிசம்பர் 27 அன்று மாண்புமிகு நீதியரசர் திரு மணிக்குமார்
அவர்கள் வெளியிட தமிழ்நாடு காவல் துறை தலைவர்
திரு இராஜேந்திரன் இகாப அவர்கள் பெற்றுக் கொண்டார்.

# குழந்தை நல காவல் அலுவலர்களுக்கான தகவல் திரட்டு (கேள்வி - பதில் வடிவில்)

**குழந்தைகளுக்கு பாதுகாப்பான தமிழகத்தினை உறுதி செய்திடும் குழந்தை நேய காவல் பணி**

---

**பேரா. ஆண்ரு சேசுராஜ். ம**

# உள்ளடக்கம்


| கேள்வி எண் | கேள்வி | பக்கம் |
|---|---|---|
| | **குழந்தை உரிமைகள்** | |
| 1 | குழந்தைகள் என்பவர் யார்? | **1** |
| 2 | ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை என்றால் என்ன? | **1** |
| 3 | குழந்தைகளுக்கான சிறப்பு சட்டங்கள் என்ன? | **2** |
| 4 | குழந்தையின் நலனுக்கே முன்னுரிமை என்றால் என்ன? | **2** |
| | **குழந்தை நேய காவல் பணி** | |
| 5 | குழந்தை நேய காவல் பணி என்றால் என்ன? | **3** |
| 6 | குழந்தை நேய காவலர் யார்? | **3** |
| 7 | குழந்தை நல காவல் அலுவலர் என்பவர் எந்த சட்டத்தின் கீழ் நியமிக்ககப்படுகிறார்கள்? | **3** |
| 8 | ஏன் குழந்தைகளுக்கென சிறப்பு காவல் பிரிவு? | **4** |
| 9 | குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு எவ்வாறு அமைய வேண்டும் ? | **5** |
| 10 | குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு குறிக்கோள்கள் என்ன? | **5** |
| 11 | குழந்தை நல காவல் அலுவலர் மற்றும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவின் அடிப்படையான கூறுகள் என்ன? | **6** |
| 12 | குழந்தை நேய காவல் நிலையங்கள் எப்படி இருக்கவேண்டும்? | **7** |
| | **இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 (JJ Act)** | |
| 13 | இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 எதற்கு? | **10** |
| 14 | இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை அமல்படுத்தும் பொறுப்பிலுள்ள அமைப்புகள் எவை? | **10** |
| | **பாதுகாப்பும் அக்கறையும் தேவைப்படும் குழந்தைகள்** | |
| 15 | அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் யார் ? | **11** |
| 16 | குழந்தை நலக் குழுமம் என்றால் என்ன? அவற்றின் பணி என்ன ? | **11** |
| 17 | குழந்தைகள் நலக் குழுமத்திடம் யார் முறையிடுவது? எப்படி முறையிடுவது? | **12** |
| 18 | குழந்தைகள் நலக் குழுமத்திடம் எப்படி முறையிடுவது? | **12** |
| 19 | மனுவைப் பெற்றவுடன் ‘குழந்தை நலக் குழு’ என்ன செய்யும்? | **13** |
| 20 | கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு எவ்வாறு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது? | **13** |
| 21 | இளஞ்சிறார் நீதி சட்டத்தின் படி குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் குற்றங்களாக அடையாளப்படுத்தப்படுவவை யாவை ? | **14** |

# உள்ளடக்கம்


| கேள்வி எண் | கேள்வி | பக்கம் |
|---|---|---|
| | **சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள்** | |
| 22 | சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகளை வயதின் அடிப்படையில் எவ்வாறு பிரிக்கப்படுகின்றனர்? | **15** |
| 23 | சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள் என யாரை குறிப்பிடுகிறோம்? | **15** |
| 24 | இளஞ்சிறார் நீதி சட்டம் 2015 - குற்றங்களை எவ்வாறு வகைப்படுத்துகிறது ? | **16** |
| 25 | சாதாரண குற்றங்கள் என்றால் என்ன? | **16** |
| 26 | சாதாரண குற்றங்களில் ஈடுபட்ட குழந்தைகளை கையாளும் வழிமுறை என்ன ? | **17** |
| 27 | ஒரு வேளை சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்ட குழந்தையினை கையகப்படுத்தும் சூழல் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்? | **20** |
| 28 | தீவிர குற்றச்செயல்களை எவ்வாறு அறிவது ? | **21** |
| 29 | தீவிர குற்றச் செயல்களுக்காக கையகப்படுத்தப்படும் குழந்தைகளை எப்படி கையாள வேண்டும்? | **21** |
| 30 | கொடூர குற்றச்செயல்கள் என்று வகைப்படுத்துவது எப்படி? | **22** |
| 31 | கொடூர குற்றங்கள் செய்ததாக கருதப்படும் குழந்தைகளை கையாளும் நடைமுறை என்ன? | **22** |
| 32 | சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை மருத்துவ பரிசோதனை செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை என்ன ? | **24** |
| 33 | இளஞ்சிறார் நீதிக் குழுமம் என்றால் என்ன? அதன் பணிகள் என்ன? | **25** |
| | **பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO Act)** | |
| 34 | பாலியல் குற்றங்களிலிந்து குழந்தைகளைப் பாதுகாக்க தனி சட்டம் ஏன்? | **26** |
| 35 | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தில் (போக்சோ) எந்த விதமான பாலியல் குற்றங்கள் தண்டனைக்குறியவையாக குறிப்பிடப்பட்டுள்ளது? | **27** |
| 36 | கடுமையான பாலியல் குற்றங்கள் என்று போக்சோ சட்டம் எதனை குறிக்கிறது ? | **27** |
| 37 | ஒரு குழந்தை பாலியல் வன்முறைக்கு உள்ளாகியிருப்பது தெரிந்து அதனை நான் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்லாவிட்டால் எனக்கு தண்டனை உண்டா? | **28** |
| 38 | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக்கு அனைத்திற்கும் ஒரே விதமான தண்டனையா? | **28** |
| 39 | குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதும் தண்டனைக்குறிய குற்றமா? | **28** |
| 40 | குழந்தை தன் மீது பாலியல் வன்முறை நிகழ்ந்ததாக குற்றம் சாட்டும் போது அதனை நிருபிக்கும் பொறுப்பு யாருடையது? | **28** |

# உள்ளடக்கம்


| கேள்வி எண் | கேள்வி | பக்கம் |
| --- | --- | --- |
| 41 | குழந்தை மீது பாலியல் வன்முறை நடந்துள்ளதாக பொய்யான புகாரளித்தால் தண்டனை உண்டா? | **29** |
| 42 | பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தையின் அடையாளத்தை வெளியிடலாமா? | **29** |
| 43 | பாலியல் வன்முறையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் வழக்குகளை முடிக்க கால வரையறை உண்டா? | **29** |
| 44 | பாலியல் வன்முறையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் குழந்தை நேய நடைமுறைகள் என்னென்ன உள்ளன? | **30** |
| 45 | பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை பற்றி தகவல் பெறப்பட்டவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டியது அவசியமா? | **32** |
| 46 | குழந்தையை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்ற குறிப்பாணை அவசியமா? | **32** |
| 47 | குழந்தையின் வாக்குமூலத்தினை யார் பதிவு செய்ய வேண்டும்? | **33** |
| 48 | பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை, குழந்தை நலக் குழுமத்தின் (CWC) முன் ஆஜர்படுத்தப்பட வேண்டுமா? | **33** |
| 49 | பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம்சாட்டப்பட்டவரை சந்திக்கலாமா? | **33** |
| 50 | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2009ன் கீழ் குற்றங்செயல்களும் அதற்குறிய தண்டனைகளும் என்ன? | **34** |
| **காணாமல் போகும் மற்றும் மீட்கப்படும் குழந்தைகள்** | | |
| 51 | காணாமல் போன குழந்தைகள் சார்ந்த புகார்கள் வரும் போது செய்ய வேண்டியது என்ன? | **35** |
| **மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு** | | |
| 52 | ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் (Integrated Child Protection Scheme ICPS) ஏன்? | **37** |
| 53 | ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகள் என்னென்ன? | **37** |
| 54 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பணிகள் என்ன ? | **38** |
| 55 | மாவட்ட அளவில் குழந்தை பாதுகாப்பிற்காக உள்ள அமைப்புகள் யாவை? | **39** |
| 56 | குழந்தை பாதுகாப்பு அமைப்புகளின் தொடர்பு எண்கள் | **40** |

# குழந்தைகள் உரிமை

## 1. குழந்தைகள் என்பவர் யார்?

இந்திய அரசியலமைப்பு சட்டம் 1949ல் அங்கீகரிக்கப்பட்ட போது 14 வயது நிறைவடையாதவர்களை குழந்தைகள் என அடையாளம் காட்டி குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதை தடை செய்தது.

1992 டிச 11 அன்று இந்திய அரசு ஐ.நா சபையின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையையும் அதிலுள்ள விதிகளையும் ஏற்றுக்கொள்வதாக ஐ. நா. சபைக்கு உறுதியளித்தது. அந்த உடன்படிக்கையின் முதல் விதி 18 வயது நிறைவடையாத அனைவரும் குழந்தைகள் என்பதாகும்.

எனவே இந்திய நாட்டிலுள்ள 18 வயது நிறைவடையாத அனைவரும் குழந்தைகள் என்பதை இந்திய அரசு தனது சட்டங்களிலும் உறுதி செய்திருக்கிறது.

## 2. ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை என்றால் என்ன?

ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை ஒரு சட்டப்பூர்வமான ஆயுதம். ஐ. நா. சபையில் 20 நவம்பர் 1989ல் தீர்மானமாக நிறைவேறிய இந்த உடன்படிக்கையையே இந்திய அரசு டிசம்பர் 11, 1992ல் ஏற்றுக் கொண்டது.

ஐ.நா. குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையே அனைத்து வகையான சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்கிய முதல் சர்வதேச உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கை நான்கு முக்கிய கொள்கைகளை அடித்தளமாக கொண்டுள்ளது.

- பாகுபாடற்ற தன்மை (விதி 2)
- குழந்தையின் நலனை முன்னிருத்தியது (விதி 3)
- குழந்தையின் உயிர் வாழ்வதற்கான, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான உரிமைகள் (விதி 6)
- குழந்தையின் கருத்துக்களுக்கு வாய்ப்பளித்தல், மதிப்பளித்தல் (விதி 12)


இந்த ஐ.நா. உடன்படிக்கை உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டின் குழந்தைகளுக்கு உறுதி செய்ய வேண்டிய அடிப்படை மனித உரிமைகளை

- அனைத்து குழந்தைகளுக்கும்,
- அனைத்து இடங்களிலும்,
- எல்லாவிதமான சூழல்களிலும் பட்டியலிடுவதுடன்
    - உயிர் வாழ்ந்திடவும்
    - முழுமையான ஆளுமையுடன் வளர்ந்திடவும்
    - தனிமைப்படுத்துதல், ஒதுக்கப்படுதல் மற்றும் அனைத்து விதமான வன்முறை மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு
    - குடும்ப, சமூக மற்றும் கலாச்சார சூழல்களில் முழுமையாக பங்கேற்பதற்குமான உரிமைகளை உறுதி செய்வதற்கான அளவுகோலினையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் முன் வைக்கிறது.

### 3. குழந்தைகளுக்கான சிறப்பு சட்டங்கள் என்ன?

- இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 (JJ Act)
- குழந்தைகளை பாலியல் வன்முறைகளில் இருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO Act)
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டம் 2009 (RTE Act)
- குழந்தை திருமண தடை சட்டம் 2006 (CMP Act)
- குழந்தை உழைப்பு (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986 (திருத்தப்பட்டது 2016) (CL (P&R) Act)
- கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்பதை கண்டறிவதை தடை செய்யும் சட்டம், 1994 (குழந்தை கருத்தறித்தலுக்கு முந்தைய மற்றும் குழந்தை பிறப்பதற்கு முன் ஆய்வுகள் தொழில்நுட்ப (பாலின தேர்வு தடை) சட்டம்) (PCPNDT Act)
- சிகிரெட் மற்றும் புகையிலை பொருட்கள் (விளம்பரப்படுத்தல் மற்றும் வணிகத்தினை முறைப்படுத்தல் ) சட்டம் 2003 (COTP Act)

உள்ளிட்ட பல சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் கொண்டுவரப்பட்டவை




### 4. குழந்தையின் நலனுக்கே முன்னுரிமை என்றால் என்ன?

குழந்தையின் உரிமைகளை உறுதி செய்ய, நாம் எடுக்கின்ற முயற்சி குழந்தையின் நலனை முன்னிறுத்தியதாக அமைய வேண்டும். நமது செயல்கள் குழந்தையின் தற்போதைய சூழலில் இருந்து மீட்டெடுக்கவும் அந்த குழந்தைக்கு மறுவாழ்வளிக்கவும், சமூகத்தோடு மீண்டும் சக மனிதனாக உள்ளிணையவும் உதவிடும் வகையில் அமையவேண்டும்.

நமது செயல்கள் எக்காரணம் கொண்டும் குழந்தையை மேலும் கடுமையான சூழலுக்கு உள்ளாக்கிடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்

# குழந்தை நேய காவல் பணி

### 5. குழந்தை நேய காவல் பணி என்றால் என்ன?

குழந்தைகள் இன்றைய குடிமக்கள், நாளைய தலைவர்கள் என்கிறோம். குழந்தைகள் நல்ல குடிமக்களாக வளர பல்வேறு சூழல்களை பெற்றோரும் அரசும் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். சில நேரங்களில் தவிர்க்க இயலாத சூழல்களில் அந்த குழந்தைகள் பாதிப்புக்கு ஆளாகி விடும் நிலைக்கோ அல்லது குற்றமிழைக்கும் சூழலுக்கு ஆளாகி விடுகின்றனர்.

பாதிப்புகளுக்கு உள்ளாகும் குழந்தைகள் முதலில் நாடும் இடம் காவல் நிலையங்களே. சந்தர்ப்ப சூழல்களால் நம்மிடம் வரும் குழந்தைகளை உரிய வகையில் கையாண்டு அவர்கள் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகாதவாறு பாதுகாத்து, அவர்களது எதிர்காலம் சிறக்கவும், மற்றுமொரு குற்றவாளி உருவாகி விடாமல் தடுப்பதற்கான முயற்சியே குழந்தை நேய காவல் பணி.



### 6. குழந்தை நேய காவலர் யார்?

குழந்தைகள் மனதில் நம்பிக்கையை விதைக்க கூடிய கண்ணியமான பேச்சு, மரியாதையான மொழி பயன்பாடு, உறுதியான செயல்பாடு, நம்பிக்கையூட்டும் நடத்தையோடு குழந்தைகளின் உளவியலை புரிந்துக் கொண்டு நடப்பவரே குழந்தை நேய காவலர்.

குழந்தை நல காவல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள துணை ஆய்வாளர் நிலையிலுள்ள அலுவலர் மட்டுமல்லாமல் அனைத்து காவலர்களும் குழந்தை நேய காவலர்களாக இருக்க வேண்டும்.

### 7. குழந்தை நல காவல் அலுவலர் என்பவர் எந்த சட்டத்தின் கீழ் நியமிக்ககப்படுகிறார்கள்?

குழந்தை நல காவல் அலுவலர் மற்றும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ன் பிரிவு 107ன் கீழ் நியமிக்கப்படுகின்றனர்.

## இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 ன் பிரிவு 107

1. ஒவ்வொரு காவல் நிலையத்திலும், துணை உதவி ஆய்வாளர் பதவிக்கு குறையாத, குழந்தைகளுடன் பணியாற்றும் ஆர்வம், பயிற்சி மற்றும் ஆற்றுப்படுத்தலுக்கு உள்ளான ஒருவரை பாதிக்கப்பட்ட அல்லது தவறிழைத்த குழந்தைகளுக்காக அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றிட குழந்தை நல காவல் அலுவலராக நியமிக்க வேண்டும்.

2. குழந்தைகளுக்கான காவல் துறை சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்க, குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாநகரங்களில் மாநில அரசு உருவாக்க வேண்டும். அந்த பிரிவுக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அளவிலான அலுவலர் தலைமையேற்க அந்த எல்லைக்குடபட்ட உட்பிரிவு (1)ன் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒரு பெண் உட்பட குழந்தைகளுடன் பணியாற்றிய அனுபவமுள்ள இரண்டு சமூகப்பணியாளர்கள் இருப்பார்கள்.

3. இவ்வாறு குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவுக்கு நியமிக்கப்படும் அனைத்து அலுவலர்களுக்கும் அவர்கள் தங்கள் பணியை சிறப்பாக செயல்படுத்த தேவையான அனைத்து பயிற்சிகளும் அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டவுடன் கொடுக்கப்பட வேண்டும்.

4. குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு குழந்தைகளுடன் பணியாற்றும் தொடர்வண்டி காவல் படையையும் உள்ளடக்கியதாகும்.

## 8. ஏன் குழந்தைகளுக்கென சிறப்பு காவல் பிரிவு?

குழந்தைகளை குற்றவாளிகளாக பார்க்காமல் சமூக சூழல்களினால் தவறிழைத்தவர்களாக கருதி அவர்களை நல்வழிப்படுத்துவதன் மூலமும், அவர்களின் சமூக மறு உள்ளிணைதலுக்கு உதவுதல் மூலமும் மேலும் ஒரு குற்றவாளி உருவாவதை தடுத்திட முடியும் குழந்தைகள் உரிமைகளை காக்க சர்வதேச மற்றும் தேசிய சட்டங்களில் சிறப்பு குழந்தைகள் காவல் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. காவல் துறையினர் சட்டத்தை அமுல்படுத்துகிறவர்களாக இருப்பதால் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.



குழந்தைகள் சம்மந்தப்பட்ட விஷயங்களில் காவல் துறையினர்:

- கைவிடப்பட்ட அல்லது காணாமல் போன குழந்தை முதலில் அருகில் உள்ள காவல் நிலையத்திற்குத் தான் கொண்டுவரப்படுகிறனர்.
- காணாமல் போன குழந்தையைப் பற்றிய புகார் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படுகிறது.

- சட்டத்திற்கு முரணான செயலில் ஈடுபடும் சிறாரை புகார் கொடுப்பவர் காவல் நிலையத்திற்கு கொண்டுவருகிறார்.

- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் ஒரு குழந்தை காவல் துறையினரால் மீட்கப்படுகிறது அல்லது மீட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

இதனால் குழந்தைகளின் மனநிலையை நன்கு புரிந்துக் கொண்டு அவர்களுக்கு ஏதுவான முறையில் நீதி வழங்கக் கூடிய பயிற்சி பெற்ற ஒருவர் குழந்தைகளுடன் காவல் நிலையத்தில் பணிபுரிய வேண்டும்.

இது குழந்தையின் துன்பத்தை குறைப்பதுடன் குழந்தைக்கு பெரியவர்கள் மீதுள்ள நம்பிக்கையையும் நீதி வழங்கும் முறையின் மீதுள்ள நம்பிக்கையையும் உறுதிசெய்கிறது.

நாள் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள், குற்றங்கள், குற்றவாளிகள் என்று சூழன்று வரும் காவல் நிலைய அலுவலர்களின் பணிச்சுமையோடு குழந்தைகளை அவர்கள் கையாளாமல் குழந்தைகளை பயிற்சிப்பெற்ற அலுவலர்கள் கவனமாக கையாளவும், வழக்கமான செயல்பாடுகளுடன் சேர்ந்து குழந்தைகளை கவனிக்கும் போது குழந்தைகள் குற்றவாளிகளை சந்தித்திடவும் அவர்களிடமிருந்து குற்ற நடத்தையை கற்றுக்கொள்ள வாய்ப்பிருப்பதால் குழந்தைகளுக்கென்று ஒவ்வொரு காவல் நிலையத்தில் தனி அலுவலரும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைகளுக்கென தனி காவல் பிரிவும் உருவாக்கப்படுகிறது.

## 9. குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு எவ்வாறு அமைய வேண்டும் ?

அனைத்து மாவட்டங்களிலும் நகரங்களிலும் ஒருங்கிணைப்பிற்காகவும் காவல் துறையினரால் குழந்தைகள் நடத்தப்படும் முறையை மேம்படுத்தவும் காவல் துணை கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அல்லது அதற்கும் உயர்ந்த பொறுப்பிலுள்ள ஒரு அலுவலரின் தலைமையில் அனைத்து குழந்தை நலக் காவல் அலுவலர்களும் மற்றும் இரண்டு சமூகப்பணியாளர்கள் இணைந்து குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்று இளைஞர் நீதிச் சட்டம் 2015 பிரிவு 107(2) இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு குறிக்கோள்கள் என்ன?

- காவல் நிலையத்தில், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் சிறார்களை திறமையான முறையிலும் குழந்தை நேயமான முறையிலும் நடத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட முறையில் முதல் விசாரனை நடத்தப்பட வேண்டும்.
- மேலும் ஆலோசனை வழங்குதல், மருத்துவ உதவி, மற்ற சேவைகளுடன் தொடர்பு ஏற்படுத்துவது போன்றவற்றையும் செய்ய வேண்டும்.
- குழந்தை நலக் குழுமம், இளஞ்சிறார் நீதிக் குழுமம், குழந்தை இல்லங்கள், குழந்தைகள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- குழந்தைகளுக்கு ஆலோசனை மற்றும் மறுவாழ்வு போன்ற சேவைகளுக்கு பரிசீலனை செய்ய வேண்டும்.

- சமுதாயத்தில் அதிக ஈடுபாடுடன் செயல்பட்டு ஆபத்தில் உள்ள குழந்தைகளை மீட்டல்.
- குழந்தைகள் மீதான வன்முறையை தடுத்தல்
- மேலும் சட்டத்திற்கு முரணான செயல்களில் சிறார்களை ஈடுபடாமல் தடுத்தல் போன்றவற்றை செய்ய வேண்டும். (Community Policing)
- குழந்தைகளுடன் பணிபுரிவதற்கும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும், குடும்பத்தினருடன் மீண்டும் ஒன்றினைப்பதற்கும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிய வேண்டும்.

### 11. குழந்தை நல காவல் அலுவலர் மற்றும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவின் அடிப்படையான கூறுகள் என்ன?

- குழந்தை நல காவல் அலுவலர் மற்றும் குழந்தைகளுக்கென சிறப்பு காவல் பிரிவு அலுவலர்கள் காவல்துறை சீருடையில் அல்லாமல் சாதாரண உடையில் இருக்க வேண்டும்.
- குழந்தைகளை – பாதிக்கப்பட்ட குழந்தைகளோ அல்லது தவறிழைத்ததாக கருதப்படும் குழந்தைகளோ - கூடிய மட்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து வருவதை தவிர்க்க வேண்டும்.
- தங்களது பாதுகாப்புக்கு கீழ் வரும் குழந்தைகளின் உணவு, உடை, மருத்துவம், குடிநீர், கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகளை உடனடியாக கவனிக்க வேண்டும்.
- குழந்தை நலக் குழுமம் நடைபெறும் இடம், குழுமம் கூடும் நாட்கள் மற்றும் நேரம், குழும உறுப்பினர்கள் மற்றும் விடுமுறை தின பணிசுழற்சி அட்டவணையை தெரிந்து வைத்திருக்க வேண்டும்



- இளஞ்சிறார் நீதிக் குழுமம் நடைபெறும் இடம், குழுமம் கூடும் நாட்கள் மற்றும் நேரம், குழும உறுப்பினர்கள் மற்றும் விடுமுறை தின பணிசுழற்சி அட்டவணையை தெரிந்து வைத்திருக்க வேண்டும்

- தங்களது பணி எல்லைக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்களுக்காக இயங்கும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள், நன்னடத்தை அலுவலர், குழந்தை திருமண தடுப்பு அலுவலர், வரவேற்பு இல்லங்கள், அரசால் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் இல்லங்கள் மற்றும் பள்ளிகளோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

## 12. குழந்தை நேய காவல் நிலையங்கள் எப்படி இருக்கவேண்டும்?

ஒவ்வொரு காவல் நிலையமும் குழந்தை நேய காவல் நிலையமாக இருக்க வேண்டும். நமது காவல் நிலையங்கள் குழந்தை நேய காவல் நிலையம் அமைந்திட சிலவற்றை நாம் உறுதி செய்ய வேண்டும்.

### கட்டமைப்பு

1. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பயிற்சி பெற்ற குழந்தை நல காவல் அலுவலர் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்

2. குழந்தை நல காவல் அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு எண் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. குழந்தைகளிடம் பேச, உரையாட பாதுகாப்பான தனி அறை அல்லது இடம் இருக்க வேண்டும்.

4. குழந்தைகளுக்கு அமரக் கூடிய இருக்கைகள், குடிப்பதற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், தூய்மையான கழிவறை இருப்பதை உறுதி செய்யவேண்டும

5. குழந்தை நல காவல் அலுவலர் குழந்தைகள் அணுகுவதற்கு வசதியாக தனி அறையிலோ அல்லது தனி இடத்திலோ அமரவேண்டும்.

6. குழந்தை உரிமை சார்ந்த சட்டங்கள் மற்றும் குழந்தை நேய காவல் நிலையம் உள்ளிட்ட தகவல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு அமர தனி இடம், குடிப்பதற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், தூய்மையான கழிவறைகள் உறுதி செய்திட வேண்டும்

### செயல்முறைகள்

7. குழந்தைகள் சார்ந்த குற்றங்கள் குறித்த புகார்கள், விசாரணை ஆவணங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆவணங்களை தனியாக பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

8. காணாமல் போன குழந்தைகள் பற்றி புகார்கள் உடனடியாக பதிவு செய்து நடவடிக்கை எடுத்தல்

9. குழந்தை காணாமல் போதல் உள்ளிட்ட குழந்தைகள் மீதான குற்றங்கள் குறித்த புகார்கள் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் நகல் இலவசமாக குழந்தைக்கோ அல்லது குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அளிக்க வேண்டும்.

10. காவல் நிலையத்திலுள்ள அலுவலர்கள் அனைவரும் அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை கையாளும் சரியான நடைமுறைகளை அறிந்து வைத்திருத்தல்.

11. நிலையத்திலுள்ள குழந்தை நல காவல் அலுவலர் குழந்தைகளுக்கான சிறப்பு சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை பற்றி அறிந்து வைத்திருப்பதுடன் அதனை குழந்தைகளின் சிறந்த நலனிற்காக பயன்படுத்திடும் ஆற்றல் கொண்டவராக இருக்க வேண்டும்.

**அணுகுமுறை**

12. காவல் நிலையத்திலுள்ள அலுவலர்கள் குழந்தைகள் மீதான வன்முறை, சுரண்டல், அத்துமீறல் உள்ளிட்டவற்றை எந்த வகையிலும் சகித்துக் கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும்.

13. பாதிக்கப்பட்ட பெண்களோ குழந்தைகளோ காவல் நிலையத்தினை அணுகுவது பிரச்சனையின் உச்சத்தில் வேறு வழியில்லாமல் தான் என்பதை புரிந்துக் கொண்டு அவர்களிடம் கனிவாக நடந்துக் கொண்டு துரித நடவடிக்கை எடுத்து பாதுகாப்பும் மறுவாழ்வும் கிடைக்க உதவிட வேண்டும்.

14. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை கையாளும் போது “என்ன நடந்தது” என்ற கேள்விக்கு பதில் தேடுவதை விட “ஏன் நடந்தது” என்பதை அறிந்துக் கொன்டால் மீண்டும் குழந்தை குற்றமிழைக்கும் வாய்ப்பினை தடுத்து நல்வழிப்படுத்திட முடியும்.

15. குழந்தை நல காவல் அலுவலர் குழந்தைகளுடன் பணியாற்றுவதில் பயிற்சியும் குழந்தைகள் நலன் சார்ந்த விஷயங்களை, அறிந்தவராகவும் இருப்பதுடன் தனக்கு தெரிந்தவற்றை காவல் நிலையத்திலுள்ள மற்ற அலுவலர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

16. குழந்தைகளுக்கு நிகழும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளையும் குறித்த வள ஆதாரங்களை காவல் நிலையத்தில் சேகரித்து வைத்து தேவையான நேரத்தில் அதனை பயன்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும்.

குழந்தை நல காவல் அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு எண் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**சமூக தொடர்புகள்**

17. குழந்தைகளுடன் இணைந்து பணியாற்றும் வகையில் சமூக செயல்பாடுகளை காவல் நிலையத்தினரால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

18. இளஞ்சிறார் நீதி சட்டத்தின் கீழ் பதியப்பட்ட அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளின் ஒளிப்படங்கள் மற்றும் விவரங்கள் ஊடகங்கள் உள்ளிட்ட யாருக்கும் வெளியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**ஒருங்கிணைப்பு**

19. குழந்தை நல காவல் அலுவலர் தங்களது எல்லைக்குட்ட பகுதியில் செயல்படும் குழந்தை நலக் குழுமம், இளஞ்சிறார் நீதி குழுமம், நன்னடத்தை அலுவலர், மாவட்ட சட்ட உதவி மையம், குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டவர்களோடு இணைந்து குழந்தைகளின் உரிமைகளையும் பாதுகாப்பினையும் உறுதி செய்ய ஒருங்கிணைக்க வேண்டும்.

20. காவல் நிலையத்தில் குழந்தை நலக் குழுமம், இளஞ்சிறார் நீதி குழுமம், நன்னடத்தை அலுவலர், மாவட்ட சட்ட உதவி மையம், குழந்தைகள் இல்லங்கள் சைல்டு லைன் 1098, மருத்துவமனைகள் உள்ளிட்டவற்றின் விவரங்களை அனைவரும் பார்க்கும் வகையில் வைக்க வேண்டும்.

21. குழந்தை நல காவல் அலுவலர் குறிப்பிட்ட கால இடைவெளியிலும் தேவைப்படும் நேரங்களிலும் ஒருங்கிணைப்பு கூட்டங்களை கூட்டுவது மற்றும் பிறர் ஒருங்கிணைக்கும் கூட்டங்களில் கலந்துக் கொன்டு குழந்தைகள் நலன் சார்ந்த விஷயங்களை விவாதிக்க வேண்டும்.



## இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015

,

### 13.இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 எதற்கு?

இந்தியாவில் குழந்தை உரிமைகளின் பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் உள்ள சட்டம் இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015.


இந்த சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- குழந்தைகள் என்றால் 0 -18 வயதிற்கு உட்பட்டவர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
- குழந்தைக்கு ஏதுவான நீதி முறை.
- குழந்தைகளை திருத்துவதிலிருந்து குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கவனம்.
- குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து குடும்பத்துடன் அவர்களை மீண்டும் ஒன்றிணைப்பதில் அதிக கவனம்.
- குழந்தைகளின் பராமரிப்பில் பெற்றோர்களின் பங்கிற்கு முக்கியத்துவம்.
- குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் இச்சட்டத்தை அமல்படுத்துவதில் மாநில அரசின் பங்கு மிக தெளிவாக கூறப்பட்டுள்ளது.

### 14. இளஞ்சிறார் நீதி (குழந்தைகளுக்கு அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டத்தினை அமல்படுத்தும் பொறுப்பிலுள்ள அமைப்புகள் எவை?

சட்டத்தினை அமுல்படுத்துவது, 2 சட்டபூர்வமான அமைப்புகளை சார்ந்துள்ளது.

- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்காக குழந்தை நலக் குழுமம் (CWC - Child Welfare Committee) மற்றும்
- சட்டத்திற்கு முரணானசெயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்காக இளஞ்சிறார் நீதிக் குழுமம் (JJB - Juvenile Justice Board).




### 15. அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் யார் ?

- வீடற்றவர்கள்
- அனாதைகளாக ஆதரவற்று விடப்பட்டவர்கள்
- காணாமல் போன மற்றும் வீட்டை விட்டு ஓடி வந்த குழந்தைகள்
- பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்
- உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்று திறனாளிகள்
- போதை மற்றும் குழந்தை கடத்தலுக்கு உள்ளானவர்கள்
- பிச்சையெடுக்க வைக்கப்பட்டவர்கள்
- குழந்தை தொழிலாளர்கள்
- எச்ஐவி எய்ட்சு உள்ளிட்ட தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்கள்
- இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்
- வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்
- பெற்றோரின் அல்லது பாதுகாப்பாளர்களின் பாதுகாப்பும் அக்கறையும் கிடைக்காமல் போன குழந்தைகள்




### 16. குழந்தை நலக் குழுமம் என்றால் என்ன? அவற்றின் பணி என்ன ?

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது தேவைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் நலக் குழுமம் அமைக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.
- ஒவ்வொரு குழந்தை நலக் குழுமத்திலும் ஒரு குழுத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் உள்ளனர்.
- இந்த குழுமத்தில் ஒரு பெண் உறுப்பினர் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
- மேலும் ஒருவர் குழந்தைகள் குறித்த விசயங்களில் வல்லுனராக இருக்க வேண்டும்
- மாவட்டத்தில் உள்ள தேர்வு செய்யப்பட்ட அரசு(அ) அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் குழந்தைகள் இல்லத்தின் வளாகத்தில் குழுமம் சந்திக்கிறது.
- குழுமம் நடைபெறும் குறிப்பிட்ட நேரம் மற்றும் நாட்களில் குழந்தைகள் குழுமத்திற்க்கு முன் கொண்டு வரப்படுகிறார்கள்.



- குழுமம் நடைபெறாத நாட்களில் குழந்தைகள் நேரடியாக குழுமத் தலைவர் அல்லது உறுப்பினர் வீட்டில் முன்னிருத்தப்பட்டு வரவேற்பு இல்லம் அல்லது குழந்தைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அடுத்த நாள் குழுமத்திற்கு முன் கொண்டு வரப்படலாம்.

- குழுமம் நடைபெறாத நாளில் குழுமத்தின் ஒரு உறுப்பினரிடம் மட்டும் கூட குழந்தையை கொண்டு செல்லலாம்.

- குழந்தையின் பின்னனி மற்றும் இந்த சூழ்நிலையில் தள்ளப்பட்டதற்கான காரணங்களை அறிவதற்காக இந்தக் குழுமம் குழந்தைகளுடன் அவர்களுக்கு நேயமான முறையிலும் இடத்திலும் பேசுகின்றனர்.

- நன்னடத்தை அலுவலரின் அறிக்கை மற்றும் குழந்தையை சந்தித்து பேசிய போது கிடைத்த தகவல்களைக் கொண்டு குழந்தையை குடும்பத்தினரிடம் ஒப்படைப்பதா அல்லது குழந்தைகள் இல்லத்தில் சேர்ப்பதா என்ற முடிவினை இந்த குழந்தை நலக் குழுமம் எடுக்கின்றது.





## 17. குழந்தைகள் நலக் குழுமத்திடம் யார் முறையிடுவது?

- குழந்தையே நேரடியாக முறையிடலாம்.
- குழந்தையைப் பற்றித் தெரிந்த நம்பகமான நபர் யார் வேண்டுமானாலும் முறையிடலாம்.

## 18. குழந்தைகள் நலக் குழுமத்திடம் எப்படி முறையிடுவது?

- வாய்வழியாகவோ, அல்லது ஒரு வெள்ளைத்தாளில் குழந்தைக்கு என்ன பிரச்சனை, என்ன வகையான சட்டத் தீர்வை குழந்தைக்கு அளித்தல் குழந்தைக்கு உகந்ததாக இருக்குமோ அதைத் தெளிவாக எழுதி மனுவாக தலைவர் மற்றும் குழந்தை நலக்குழு உறுப்பினர்களிடம் அளிக்க வேண்டும்.




அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தையானாலும், சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தையானாலும் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும்.

## 19.மனுவைப் பெற்றவுடன் ‘குழந்தை நலக் குழு’ என்ன செய்யும்?

இக்குழுவிற்கு சிவில் நீதிமன்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால் மற்றும் ஒரு நீதிமன்றம் போல் செயல்படும். ஆனால் குழந்தைகளின் நலன், பாதுகாப்பு இவற்றை முதன்மைக் கோட்பாடாக கொண்டு செயல்படும்.

உதாரணமாக நாம் அளித்துள்ள மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு ‘சம்மன்’ அனுப்பி குழந்தை நலக்குழு அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரிக்கும். சில வேளைகளில் புகார் அளித்துள்ள குழந்தையின் வசிப்பிடத்திற்கே சென்றுகூட விசாரிக்க வேண்டிய நிலை இருப்பதாக இக்குழு உணர்ந்தால் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுக்கு அனுப்பி அவர்களின் உதவியை குழந்தைகளுக்கு வேண்டிய உதவிகளை செய்ய, பாதுகாப்பு அளிக்க சம்மந்தப்பட்ட அமைப்புகளுக்கு உத்தரவிடும் அதிகாரம் இக்குழுவிற்கு உண்டு.

இந்தக் குழவிடம் வரும் புகார்களுக்கு 4 மாத காலத்திற்குள் தீர்வு கண்டுவிட வேண்டும்.

உதவி, பாதுகாப்பு, தொடர்ந்து குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற காரணங்களுக்காக இந்தக்குழு சம்மந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடும். அதை நிறைவேற்றாவிட்டால் உயர்நீதி மன்றத்தை அணுகி நிவாரணம் பெறலாம்.

இத்தகைய உத்தரவுகளைப் இடுவதற்கு CWC தலைவருடன் 2 உறுப்பினர்கள் இருந்தால் போதும். 5 பேரும் இருக்க வேண்டும் என்பதில்லை.

## 20. கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு எவ்வாறு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது?

சில நேரங்களில் முட்செடிகளிலும் சாலை ஓரங்களிலும், கழிவு நீர் வாய்க்கால்களிலும் குழந்தைகளை வீசிவிட்டுச் செல்லும் சமூக அவலநிலை இன்றும் நடந்து வருகிறது. இத்தகைய குழந்தைகளை மாவட்ட குழந்தை உரிமை பாதுகாப்பு அலகு மீட்டு அக்குழந்தைகளுக்கு தேவைப்படும் மருத்துவ உதவிகளை அளித்து இந்த மாவட்ட குழந்தை நலக்குழுவிடம் ஒப்படைக்கிறது.




குழந்தை நலக்குழுவே இறுதி முடிவெடுத்து இத்தகைய குழந்தைகளை பாதுகாத்து வரும்.

## 21. இளஞ்சிறார் நீதி சட்டத்தின் படி குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் குற்றங்களாக அடையாளப்படுத்தப்படுவவை யாவை ?

பின்வரும் செயல்களை இளஞ்சிறார் நீதி சட்டம் 2015 பிரிவு 74 முதல் 85 வரை அடையாளம் காட்டுகிறது

- பாதிக்கப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட்ட குழந்தையின் அடையாளத்தினை வெளியிடுவது
- கொடுமைப்படுத்துதல்
- குழந்தைகளை பிச்சையெடுக்க மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுத்துதல்
- குழந்தைகளுக்கு புகையிலை உள்ளிட்ட போதை பொருட்களை கொடுத்தல் பயன்படுத்த செய்தல்
- போதை பொருட்களை கடத்த, விற்க, பதுக்க குழந்தைகளை பயன்படுத்துதல்
- குழந்தைகளை பணியில் அமர்த்துதல், அவர்கள் உழைப்பை சுரண்டுதல்
- முறையான நடைமுறைகளை கையாளாமல் குழந்தைகளை தத்தெடுத்தல், தத்துக் கொடுத்தல்
- குழந்தையினை விற்றல் அல்லது வாங்குதல்
- குழந்தையினை உடல் ரீதியாக தண்டித்தல்
- குழந்தையினை சட்டவிரோத ஆயுத குழுவில் இணைத்தல், பயன்படுத்தல், கடத்தல்
- மாற்றுத்திறனாளி குழந்தைகளின் மீதான வன்முறை போன்றவையாகும்



## சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள்

**22. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகளை வயதின் அடிப்படையில் எவ்வாறு பிரிக்கப்படுகின்றனர்?**



சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை வயதிற்கேற்ப பின்வருமாறு பிரிக்கலாம்

- ஏழு வயதிற்கு கீழ்

  இந்திய தண்டனை சட்டம் (IPC) பிரிவு 82 ஏழு வயது நிறையாத குழந்தையின் செயல்கள் எதுவும் குற்றச்செயல்கள் ஆகாது என்கிறது

- ஏழு வயது முதல் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்

  இந்திய தண்டனை சட்டம் (IPC) பிரிவு 83 ஏழு வயது முதல் 12 வயது நிறையாத குழந்தையின் செயல்கள் அந்த செயலை புரிந்துக் கொள்ளும் குழந்தையின் மன முதிர்ச்சியின் அடிப்படையிலேயே அது குற்றச்செயலா இல்லையா என முடிவெடுக்க வேண்டும் என்கிறது

- 12-16 வயது
- 16-18 வயது

என்று பிரித்து அதற்கேற்ப நீதி வழங்கும்முறை தீர்மானிக்கப்படுகிறது.

**23. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள் என யாரை குறிப்பிடுகிறோம்?**

சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் சிறார்கள் திருட்டு, பிக் பாக்கெட், பயணச்சீட்டின்றி பயணம் செய்தல், வீதிச் சண்டை போன்ற சிறு குற்றங்களை செய்த குழந்தைகளும், திவிரவாதம், கொலை, பாலியல் வண்முறை போன்ற பெரிய குற்றங்களில் ஈடுபட்ட குழந்தைகளையும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள் என்கிறோம்.

இந்த சட்டத்திற்குக் கீழ் எந்த குழந்தையும் குற்றவாளி அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் குடும்ப சூழ்நிலையே அவர்களை தவறு செய்ய தூண்டுகிறது. இந்த சட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு தண்டனை கொடுக்கப்படாமல் அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து குடும்பத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகீறது.

## 24. இளஞ்சிறார் நீதி சட்டம் 2015 – குற்றங்களை எவ்வாறு வகைப்படுத்துகிறது ?

இளஞ்சிறார் நீதி சட்டம் 2015, குழந்தைகள் புரியும் குற்றங்களை (சட்டத்திற்கு முரணான செயல்கள்) மூன்று வகையாக பிரிக்கிறது.

- **சாதாரண குற்றங்கள்**

  இந்திய தண்டனை சட்டத்தின் படி மூன்றாண்டுகளுக்கு குறைவான தண்டனை பெறக் கூடிய குற்றங்கள்

- **தீவிர குற்றங்கள்**

  இந்திய தண்டனை சட்டத்தின் படி மூன்றாண்டுகளுக்கு மேலும் ஏழு ஆண்டுகளுக்கு குறைவான தண்டனை பெறக் கூடிய குற்றங்கள்

- **கொடுரக் குற்றங்கள்**

  இந்திய தண்டனை சட்டத்தின் படி ஏழு ஆண்டுகளுக்கு அதிகமான தண்டனை பெறக் கூடிய குற்றங்கள்




எந்த சூழலிலும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகள் எவ்வகை குற்றம் செய்திருந்தாலும் மற்ற குற்றவாளிகள் போல் நடத்தப்படக் கூடாது. சிறைச்சாலை, காவல் நிலைய வைத்திருப்பு, விலங்கிடுதல் போன்றவை கூடவே கூடாது.

## 25. சாதாரண குற்றங்கள் என்றால் என்ன?

இளஞ்சிறார் நீதி சட்டம் 2015, பிரிவு 2 (45) இந்திய தண்டனை சட்டத்தின் படியோ அல்லது நடைமுறையிலுள்ள எந்தவொரு சட்டத்தின் படியோ மூன்றாண்டுகளுக்கு குறைவான தண்டனை பெறக் கூடிய குற்றங்களை சாதாரண குற்றங்கள் என்கிறது.

**எ.கா.**

- இ.த.ச. 379 திருட்டு
- இ.த.ச. 143 முதல் 148 வரை கலவரங்களில் குழந்தைகள் பங்கேற்றல்
- இ.த.ச.187 மத கூடுகைகளில் அமைதியை கெடுக்கும் செயல்களில்ஈடுபடுவது.
- இ.த.ச. 323 காயம் ஏற்படுத்துதல்
- இ.த.ச. 417 ஏமாற்றுதல்
- இ.த.ச. 447 அத்துமீறி நுழைதல்
- இ.த.ச. 448 அத்துமீறி வீட்டில் நுழைதல்

**26. சாதாரண குற்றங்களில் ஈடுபட்ட குழந்தைகளை கையாளும் வழிமுறை என்ன ?**

1. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்ட குழந்தைகளை கையாளும் போது குழந்தை நல காவல் அலுவலர் மற்றும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு அலுவலர்கள் காவல்துறை சீருடையில் இருப்பதை தவிர்த்து சாதாரண உடையில் இருப்பது அவசியம்.

2. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்ட குழந்தைகளை கையாளும் போது நாம் செய்யும் செயல் அல்லது எடுக்கும் நடவடிக்கை சம்பந்தப்பட்ட குழந்தையின் இன்றைய நலன், நாளைய எதிர்காலம் அல்லது மறு சமூக உள்ளிணைதலுக்கு முரணான சூழலை உருவாக்கி விடுமா? ஏன ஆய்ந்து செயல்பட வேண்டியது முதன்மையான பணி

3. குழந்தையை கையகப்படுத்தும் அவசியம் இருக்கிறதா என்பதை முதலில் உறுதி செய்துக் கொள்ள வேண்டும். சாதாரண குற்றச்செயல் எனில் குழந்தையை கையகப்படுத்தக் கூடாது. கொடூரக் குற்றங்களுக்கு குழந்தைகளை கையகப்படுத்தலாம். தீவிர குற்றச்செயல்கள் செய்திருந்தால் குழந்தையின் நலனை ஆராய்ந்து கையப்படுத்துதல் அவசியம் எனில் குழந்தையின் கண்ணியத்தினையும், மறு சமூக உள்ளிணைதலுக்கு கெடுதல் ஏற்படாமல் கையகப்படுத்த வேண்டும்.

➢ குழந்தையின் நலனை முன் வைத்து கையகப்படுத்தல் என்பது.

- ஒரு வேளை குற்றச்செயலின் போது பொதுமக்களால் பிடிக்கப்பட்ட குழந்தையை மக்களின் கோபத்திலிருந்து காப்பதற்கு கையகப்படுத்தல் அவசியமெனில் கையகப்படுத்தலாம.
- பெரியவர்களின் தூண்டுதலாலோ அல்லது அவர்களுடன் கூட்டு சேர்ந்தோ குழந்தை குற்றச்செயலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் மீண்டும் அச்சூழலுக்கு குழந்தை உள்ளாகக்கூடும் என்ற சூழல்

➢ கொடூரக் குற்றச்செயல் தவிர்த்து மற்ற சட்டத்திற்கு முரணான செயல்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடாது. ஒருவேளை குழந்தை பெரியவர்களுடன் இணைந்து சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டிருந்தால் அந்த முதல் தகவல் அறிக்கையில் குழந்தையின் பெயர் இணையலாம் (இநீச விதிகள் 2016 8(1))

➢ குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு அல்லது குழந்தை நல காவல் அலுவலர் தங்களது தினசரி டைரியில் குழந்தையின் மீதான குற்றச்சாட்டு மற்றும் கையக்கப்படுத்திய சூழலினை பதிவு செய்து தேவையெனில் இளைஞர் நீதி சட்ட விதிகள் 2016ன் இணைப்பில் உள்ள படிவம் 1ல் கொடுக்கப்பட்டுள்ள சமூக விசாரணை அறிக்கையை தயார் செய்து இளைஞர் நீதி குழமத்தின் முன் குழந்தை முதல் முறையாக ஆஜர் படுத்தும் போது சமர்ப்பிக்க வேண்டும்.


4. கையகப்படுத்த தேவைப்படாத சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை இளைஞர் நீதி குழமத்தின் முன் குறிப்பிட்ட நாளில் ஆஜர்ப்படுத்த வேண்டுமென்ற உறுதிபெற்று பெற்றோர் / பாதுகாவலர் / குழந்தை நல அலுவலர் அல்லது குழந்தையின் பொறுப்பானவருடன் அனுப்பி வைக்கலாம்.

5. குற்றம் உறுதி செய்யப்படும் வரை ஒவ்வொரு குழந்தையும் குற்றமற்றவரே என்பது தான் சட்டம். எனவே சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை குற்றத்தினை ஒப்புக்கொள்ள கட்டாயப்படுத்தவோ ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவோ வற்புறுத்தக்கூடாது. எந்த தாளிலும் கையெழுத்திட வற்புறுத்தக் கூடாது.

6. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை முறையாக பயிற்சிப்பெற்ற குழந்தை நல காவல் அலுவலர் அல்லது குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவினர் மட்டுமே குழந்தை நேய முறையில் விசாரிக்க வேண்டும். அத்தகு விசாரணை இயன்றவரை குழந்தைகள் எங்கு பாதுகாப்பாக உணர்கிறார்களோ அந்த இடத்தில் நடக்க வேண்டும் அல்லது காவல் நிலையத்தில் நடப்பதாக இருந்தால் மற்ற விசாரணை கைதிகள் மற்றும் குற்றவாளிகளை சந்திக்கின்ற, சிறை போன்ற தோற்றத்தினை உருவாக்கக்கூடிய இடங்களில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் குழந்தைகளுக்கு ஏதுவான, பாதுகாப்பான இடத்தில் விசாரிக்க வேண்டும்.

7. குழந்தையினை விசாரிக்கும் போது குழந்தையின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குறிய ஒருவரை உடன் வைத்துக் கொண்டு விசாரிக்க வேண்டியது கட்டாயம்.

8. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக ஒரு குழந்தையின் மீது புகார் பெறப்பட்டவுடன், கையகப்படுத்தினாலும் கையப்படுத்த தேவையில்லாவிட்டாலும், உடனடியாக சமூகப்பாதுகாப்பு துறையின் நன்னடத்தை அலுவலருக்கு (Probation Officer) உடனடியாக தெரிவித்து சமூக விசாரணை அறிக்கை ஆய்வு மற்றும் இளஞ்சிறார் நீதி குழுமத்தின் விசாரணைக்கு தேவையான தகவல்களை திரட்ட உதவிட வேண்டும்.



பள்ளி கல்லூரிகளில் குழந்தை நல காவல் அலுவலரின் தொடர்பு எண்களை பார்வைக்கு வைக்கலாம்.

9. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கையகப்படுத்தப்பட்ட அல்லது புகாருக்கு உள்ளான குழந்தைக்கு தேவைப்பட்டால் உரிய மருத்தவ உதவி, மொழிப்பெயர்ப்பாளர் அல்லது சைகைமொழி உதவியாளர் போன்ற உதவியை உறுதி செய்யவேண்டும்.

10. குழந்தை மீதான புகார் பெறப்பட்டவுடன் குழந்தையின் வயதினை உறுதி செய்திட தேவையான ஆவணங்களை விரைவில் பெற அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இது பின் நாளில் வயது குறித்த சந்தேகங்கள் மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்துவதை தவிர்க்க உதவும்.

11. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கொண்டுவரப்பட்ட குழந்தை தான் பெரியவர்களில் சொல்படியோ அல்லது வற்புறுத்தலினாலோ செய்ததாக குறிப்பிட்டால் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருவேளை குழந்தை தீங்கிழைத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலோ அல்லது வன்முறைக்கு ஆளாகியிருந்தாலோ உடனடியாக சம்பந்தப்பட்ட தனி நபர் மீதோ அல்லது குழவாக இருப்பின் குழு மீதோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தை பெண் குழந்தையாக இருக்கும் சூழலில் பெண் குழந்தை நல காவல் அலுவலர் அல்லது குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவின் பெண் அலுவலரே கையாளவேண்டும். அவ்வாறு பெண் அலுவலர் இல்லாத பட்சத்தில் ஆண் அலுவலர் குழந்தைகள் இல்லம் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பெண் சமூகப்பணியாளரின் உதவியை பெற வேண்டும். விசாரணை மற்றும் பயணப்பாதுகாப்பின் போது ஆண் அலுவலருடன் இந்த பெண் சமூகப்பணியாளர் கண்டிப்பாக உடனிருக்க வேண்டும். எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் பெண் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.




13. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருத்தப்படும் குழந்தையின் அந்தரங்கமும் அடையாளமும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். தவறாக முத்திரைக்குத்துதல், தவறான முன்மொழிதல் உள்ளிட்ட குழந்தையின் கண்ணியத்தினை பாழாக்ககூடிய எந்தவொரு செயலையும் செய்திடாத வண்ணம் கவனமாக இருக்க வேண்டும்

14. எந்தவொரு சூழலிலும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருத்தப்படும் குழந்தையின் அடையாளம் நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளியாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

15. குழந்தை மீதான விசாரணை குழந்தை முதல் முறையாக குழுமத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டதிலிருந்து 4 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாத சூழலில் மேலும் இரண்டு மாதங்கள் கால அவகாசத்தினை தாமதமாகும் சூழலை எழுத்து வடிவில் சுட்டிக்காட்டி பெருநகர முதன்மை நடுவர் அல்லது மாவட்ட நீதியியல் நடுவர் (மாவட்டத்திற்கேற்ப) அவர்களிடம் ஆணையாக பெற வேண்டும். நீடிக்கப்பட்ட காலத்தில் வழக்கினை முழுமையாக முடிக்காவிட்டால் வழக்கினை கைவிட வேண்டும்.

## 27. ஒரு வேளை சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்ட குழந்தையினை கையகப்படுத்தும் சூழல் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

1. குழந்தை நல காவல் அலுவலர் அல்லாத ஒரு அலுவலரால் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருத்தப்படும் குழந்தை கையகப்படுத்தப்பட்டால் விரைவில் உரிய குழந்தை நல காவல் அலுவலரிடமோ அல்லது குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இநீச 2015, பிரிவு 10(1)

    - குழந்தையினை கையகப்படுத்தியவுடன் சம்பந்தப்பட்ட இளஞ்சிறார் நீதி குழுமத்தின் முன் ஆஜர்படுத்த வேண்டும்.

    - ஒரு வேளை இளஞ்சிறார் நீதி குழுமம் நடைபெறாத நாள் அல்லது நேரத்தில் கையகப்படுத்தப்பட்டால் பணி குறிக்கப்பட்டுள்ள இளஞ்சிறார் நீதி குழும தலைவர் அல்லது உறுப்பினரின் முன் ஆஜர்படுத்த வேண்டும். இளஞ்சிறார் நீதி குழும பணி அட்டவணை உரிய கால இடைவெளியில் குழந்தை நல காவல் அலுவலர்கள் மற்றும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவுடன் பகிர்ந்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. எக்காரணம் கொண்டும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருத்தப்படும் குழந்தைக்கு கைவிலங்கிடுவது, காவல் நிலைய கூண்டில் அடைப்பது, சிறையில் அடைப்பது அல்லது சங்கிலியில் பிணைப்பது கூடாது. எவ்வகையான வற்புறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் கூடாது. மேலும் காவல் நிலையத்தில் இருக்கும் போதோ அல்லது இளைஞர் நீதி குழுமம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களுக்கு அழைத்து செல்லும் போதோ மற்ற கைதிகளை சந்திக்கும் வாய்ப்பினை உறுதியாக தடுக்க வேண்டும்.



3. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்ட குழந்தை ஒரு வேளை வீட்டிலிருந்தோ குழந்தைகள் இல்லத்திலிருந்தோ அல்லது வேறெங்கிலுமிருந்து ஓடி வந்திருந்தால் குழந்தையின் பெற்றோர், காப்பாளர் அல்லது சம்பந்தப்பட்ட குழந்தைகள் இல்ல பொறுப்பாளருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும்.

4. குழந்தையிடம் நேரடியாகவும் அல்லது பெற்றோர் பாதுகாவலர் வாயிலாக தெளிவாகவும் என்னென்ன குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கிறது என்பதையும் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு இருந்தால் அதன் நகல் குழந்தைக்கோ அல்லது பெற்றோர் பாதுகாவலருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

5. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தையை கையகப்படுத்திய காவல் அலுவலர் இநீச 2015 பிரிவு 12(2) ன்படி இளஞ்சிறார் நீதி குழுமத்தின் முன் ஆஜர் செய்வதற்கு இடையில் உள்ள கால இடைவெளியில் குழந்தையை கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். குழந்தை கையகப்படுத்தப்பட்ட 24 மணி நேரத்திற்குள் இநீச 2015 தமிழ்நாடு விதிகள் 2017 பிரிவு 9ன் படி இளஞ்சிறார் நீதி குழுமத்தின் முன் ஆஜர்படுத்தி உரிய ஆணையை பெற வேண்டும்.

## 28. தீவிர குற்றச்செயல்களை எவ்வாறு அறிவது ?

இளஞ்சிறார் நீதிச்சட்டம் 2015 அதிகாரம் 1, பிரிவு 2(54) தீவிர குற்றங்களை பின்வருமாறு விளக்குகிறது.

இந்திய தண்டனை சட்டம் அல்லது நடைமுறையில் உள்ள இன்ன பிற சட்டங்களில் மூன்றாண்டுக்கு மேலும் ஏழு ஆண்டுகளுக்கு குறைவான தண்டனையும் உள்ள குற்றச்செயல்கள் தீவிர குற்றச்செயல்களாகும்

## 29. தீவிர குற்றச் செயல்களுக்காக கையகப்படுத்தப்படும் குழந்தைகளை எப்படி கையாள வேண்டும்?

சாதாரன குற்றங்களுக்காக வரும் குழந்தைகளை கையாளும் நடைமுறையே தீவிர குற்றச்செயல்கள் புரிந்ததாக கருதப்படும் குழந்தைகளுக்கும் பொருந்தும்

இநீச 2015 பிரிவு 14 (5) (e) ன் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973ன் படி சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டு தீவிர குற்றம் புரிந்ததாக கருதப்படும் குழந்தைகள் மீதான விசாரணை நடைபெற வேண்டும்.

குழந்தை மீதான விசாரணை குழந்தை முதல் முறையாக குழுமத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டதிலிருந்து 4 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாத சூழலில் மேலும் இரண்டு மாதங்கள் கால அவகாசத்தினை தாமதமாகும் சூழலை எழுத்து வடிவில் சுட்டிக்காட்டி பெருநகர முதன்மை நடுவர் அல்லது மாவட்ட நீதியியல் நடுவர் (மாவட்டத்திற்கேற்ப) அவர்களிடம் ஆணையாக பெற வேண்டும்.

### 30. கொடூர குற்றச்செயல்கள் என்று வகைப்படுத்துவது எப்படி?

இளஞ்சிறார் நீதிச்சட்டம் 2015 அதிகாரம் 1, பிரிவு 2 (33) கொடூரக் குற்றங்களை பின்வருமாறு விளக்குகிறது. இந்திய தண்டனை சட்டம் அல்லது நடைமுறையில் உள்ள இன்ன பிற சட்டங்களில் ஏழு ஆண்டுகளுக்கு அதிகமான தண்டனை உள்ள குற்றச்செயல்கள் கொடூர குற்றச்செயல்களாகும்.

இநீச பிரிவு 15 (5) (ஊ) கொடூரக் குற்றங்கள் சார்ந்த விசாரணை

(i) சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தை செயலினை செய்தப் போது பதினாறு வயது நிறைவடையாமல் இருந்தால் இளஞ்சிறார் நீதிக் குழுமத்தாலேயே உட்பிரிவு (உ)வின் கீழ் முடிவெடுக்கலாம்

(ii) சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தை செயலினை செய்தப் போது பதினாறு வயது நிறைவடைந்து இருந்தால் பிரிவு 15ன் கீழ் மேல் விசாரனைக்கு முடிவெடுக்கலாம்

### 31. கொடூர குற்றங்கள் செய்ததாக கருதப்படும் குழந்தைகளை கையாளும் நடைமுறை என்ன?

சாதாரண குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக கருதப்பட்ட குழந்தைகளை கையாளும் போது செயல்படுத்தும் அதே நடைமுறைகளை கொடூர குற்றச்செயல்கள் செய்ததாக கருதப்படும் குழந்தைகளிடமும் கையாளவேண்டும்.

குழந்தைகள் கொடூர குற்றச்செயல்கள் புரிந்துள்ளதாக கருதப்படும் போது பின் வரும் நடைமுறைகளை கையாள வேண்டும். இந்த நடைமுறைகளில் சில இளஞ்சிறார் நீதி குழுமத்தின் செயல்களாகும். விசாரணை அலுவலருக்கு நடைமுறைகளை பற்றிய முழுமையான புரிதலை உருவாக்க இங்கே அவை பட்டியலிடப்பட்டுள்ளது.

1. கொடூர குற்றச்செயல் புரிந்ததாக கருதப்படும் குழந்தை பதினாறு வயது முழுமையடைந்தவராக இருந்தால் குழந்தை நல காவல் அலுவலர் தனது விசாரணையின் போது ஆவணப்படுத்திய சாட்சிகளை குழந்தை இளஞ்சிறார் நீதி குழுமத்தின் முன் முதன் முறையாக ஆஜர்படுத்திய நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் நகலை குழந்தைக்கோ, குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

2. குழந்தையை இளஞ்சிறார் நீதி சட்ட விதி 15ன் கீழ் குழந்தைக்கு குற்றத்தினை புரியக்கூடிய உளவியல் மற்றும் உடல்சார்ந்த திறன் மற்றும் அதன் பின்விளைவுகள் குறித்த புரிதல் பற்றிய ஆரம்பக் கட்ட ஆய்வுக்காக அரசு அல்லது முன் வரும் தனியார் மருத்துவக்கல்லூரியிலுள்ள அல்லது மருத்தவமனையிலுள்ள குழந்தைகள் நலவாழ்வு துறை அல்லது உளவியல் துறைக்கு அனுப்பி உரிய அறிக்கையை பெற வேண்டும். தேவையெனில் இரண்டாம் கருத்தறியவும் அனுப்பலாம். (இநீச 2015, தநா விதிகள் பிரிவு 9)

3. தொடக்க நிலை ஆய்வுக்கு தேவையெனில் இளஞ்சிறார் நீதிக் குழுமம் குற்றம் சாட்டப்பட்ட குழந்தையுடனோ அல்லது குழந்தையின் குடும்பத்திடம் விசாரணை செய்யலாம். சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தை வழக்கறிஞர் வாயிலாகவும் தனது நிலைப்பாட்டினை முன்வைக்கலாம். அதனை இளஞ்சிறார் நீதிக் குழுமம் அங்கீகரிக்கலாம்.

4. நீதி குழுமம் குழந்தை நல காவல் அலுவலரால் முன் வைக்கப்படும் விசாரணை அறிக்கை, சாட்சிகளின் பதிவுகள் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவ அறிக்கைகள், தடயவியல் அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகளை கணக்கிலெடுத்துக்கொள்ளலாம்.

5. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தையின் மருத்துவ அறிக்கையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

6. குழந்தையின் மனமுதிர்ச்சி நிலை குறித்த மனநல அறிக்கையையும் இளஞ்சிறார் நீதி குழுமம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

7. இநீச 2015 ன் பிரிவு 15ன் படி தொடக்க கட்ட விசாரணையின் அடிப்படையில் தேவையெனில் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தையினை வயது வந்த நபராக (பெரியவராக) கருதி விசாரணை நடத்திட ஆணையிடலாம். அவ்வாறு ஆணையிடும் போது அதற்கான காரணங்களை குறிப்பிட வேண்டும். ஆணையின் நகல் குழந்தைக்கு கொடுக்கப்பட வேண்டும்.

இந்திய நாட்டிலுள்ள 18 வயது நிறைவடையாத அனைவரும் குழந்தைகள் என்பதை இந்திய அரசு தனது சட்டங்களில் உறுதி செய்திருக்கிறது.

8. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தையினை வயது வந்த நபராக (பெரியவராக) கருதி விசாரணை நடத்திடும் பொறுப்பு குழந்தைகள் நீதிமன்றத்திற்கு உண்டு. தமிழகத்தினை பொருத்தவரை பெண்கள் நீதிமன்றங்களே (மகிளா நீதிமன்றம்) குழந்தைகள் நீதிமன்றங்களாக அரசால் நிர்ணகிக்கப்பட்டது.

9. இவ்வாறு இளஞ்சிறார் நீதி மன்ற விசாரணையில் இருந்து குழந்தைகள் நீதி மன்றத்திற்கு விசாரணை மாற்றப்பட்டாலும் குழந்தைகளை கண்ணியத்துடன் கையாளும் நடைமுறையில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது.

10. பதினெட்டு வயது நிறைவடையும் வரை சிறை தண்டனை அளிக்கப்படக் கூடாது.

## 32. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை மருத்துவ பரிசோதனை செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை என்ன ?

சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கோ அல்லது எச்ஐவி/ எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு இருக்கக கூடிய வாய்ப்பிருக்கிறது. மேலும் உடல். மன, உளவியல் ரீதியிலான தாக்குதலுக்கும் உள்ளாகியிருக்க வாய்ப்பிருப்பதால் உடனடியாக மருத்துவ உதவி அளித்தல் நல்லது.

- போதை உள்ளிட்ட மயக்கும் பொருட்களுக்கு குழந்தை அடிமையாகி இருக்க வாய்ப்பிருப்பதால் மீட்பு மற்றும் மறுவாழ்வு வாய்ப்புகளை குழந்தைக்கு உருவாக்கி தர வேண்டும்.

- குழந்தை நல காவல் அலுவலர் குழந்தையினை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

- மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சையின் போது குழந்தைக்கு நம்பகமான சூழலை உருவாக்க அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடனிருக்க அனுமதிக்கலாம்.

- பெண் குழந்தையாக இருந்தால் ஒரு பெண் மருத்துவரே குழந்தையை பரிசோதிக்க வேண்டும்.

- குழந்தைக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைப் பற்றி தெளிவாக கூறி குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பளிக்காமல் நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.

- சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டு கையகப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை அல்லது பரிசோதனைக்கு வரும் குழந்தையிடம் வழக்கு பற்றி பேசக்கூடாது.

- நன்னடத்தை அலுவலர் சமர்பிக்கும் அறிக்கை, குழந்தையின் பின்னனி மற்றும் குடும்பத்தின் சூழ்நிலையை அறிய ஒரு முக்கியமான ஆவணமாக உள்ளது.

நன்னடத்தை அலுவலரின் அறிக்கை, நடந்த தவறு மற்றும் குழந்தையுடன் பேசும் போது கிடைத்த தகவல் ஆகியவற்றை மனதில் கொண்டு குழந்தையை பெற்றோருடன் சேர்த்து வைப்பதா அல்லது மறுவாழ்விற்காக சிறப்பு இல்லத்தில் வைப்பதா என்று இளஞ்சிறார் நீதிக் குழுமம் முடிவு செய்கின்றது.

## 33. இளஞ்சிறார் நீதிக் குழுமம் என்றால் என்ன? அதன் பணிகள் என்ன?

ஒரு மாவட்டத்திற்காக எங்கே ஒரு குழுமம் அமைக்கப்பட்டுள்ளதோ, அத்தகைய குழுமம், சட்டத்துடன் முரண்படும் குழந்தைகள் தொடர்புடைய அனைத்து சட்ட நடவடிக்கைகளிலும் தனித்த அதிகாரத்துடன் செயற்படும்.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் இளஞ்சிறார் நீதிக் குழுமம் அமைப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.
- இளஞ்சிறார் நீதிக் குழுமத்தில் 1 தலைவரும் 2 உறுப்பினர்களும் உள்ளனர்.
- மாவட்டத்தின் தலைமை நீதிபதி இதற்கு தலைவராகவும் 2 சமூக பணியாளர்கள் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். உறுப்பினர்களில் ஒருவர் கண்டிப்பாக பெண்ணாக இருக்க வேண்டும்.
- தலைவராக நியமிக்கப்படும் நீதிபதிக்கு குழந்தை உளவியல் அல்லது குழந்தை நலன் குறித்த அறிவோ பயிற்சியோ இருக்க வேண்டும்.
- இக்குழுமத்தின் பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும்.

குழந்தையினை விசாரிக்கும் போது குழந்தைக்கு நம்பகமான ஒருவர் உடன் இருக்க வேண்டும்.



## பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் - 2012 (POCSO Act)




### 34. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க தனி சட்டம் ஏன்?

இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை 2007ல் ஒரு ஆய்வினை மேற்க்கொண்டது இந்த ஆய்வில் 17220 குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பங்கேற்றனர். குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை குறித்து அறிந்துக் கொள்ள செய்யப்பட்ட இந்த ஆய்வில் 53.22 சதவிகித குழந்தைகள் ஏதோ ஒரு வகையிலான பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியானது. பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 52.94 சதவிகிதம் ஆண் குழந்தைகளும் 47.06 சதவிகிதம் பெண் குழந்தைகள் ஆகும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் பாலியல் தொந்தரவு மற்றும் சுரண்டல்களிலிருந்து குழந்தைகளை காக்க 2012 ஆம் ஆண்டில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (The Protection of Children from Sexual Offences Act-2012) ‘‘போக்சோ’’ என்ற சட்டத்தை நடுவன் அரசு இயற்றியுள்ளது.

- இச்சட்டம் இயற்றப்படும் முன்னர் இந்திய தண்டனைத் சட்டம் (Indian Penal Code) 1890 பிரிவு 375ன் கீழ் உட்புகுத்தி பாலியல் வல்லுறவு (கற்பழிப்பு) மட்டுமே பாலியல் குற்றம் என வரையறை செய்யப்பட்டு இருந்தது.
- பதினெட்டு ஆண்டுகள் வயதுக்குக் கீழ் உள்ள எந்தவொரு நபரும் 'குழந்தை’’ (Child) என வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் வரும் முன்னர் இதச 90ன் படி இது 12 வயது என்றிருந்தது.
- இந்த போக்சோ சட்டம் அதிலிருந்து சற்று வேறுபட்ட ஒரு சிறப்புச் சட்டமாகும். இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தில் உள்ள பல குறைபாடுகளை தீர்க்கப்படும் வகையில் இரு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பாலின பொதுவான இச்சட்டம் ஆண் குழந்தை, பெண் குழந்தை என்ற பாகுபாடில்லாமல் அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாக்கும் சட்டமிது.

**35. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தில் (போக்சோ) எந்த விதமான பாலியல் குற்றங்கள் தண்டனைக்குறியவையாக குறிப்பிடப்பட்டுள்ளது?**

பாலியல் குற்றங்களின், பல்வகை வடிவங்களாகிய

- உள்புகுத்தி பாலியல் தாக்குதல; (Penetrative Sexual Assault)
- கடுமையான உளபுகுத்தி பாலியல் தாக்குதல் (Aggravated Penetrative Sexual Assault)
- பாலியல் தாக்குதல் (Sexual Assault)
- பாலியல் தொந்தரவு (Sexual Harassment) மற்றும்
- ஆபாசப்படமாக்கலுக்கு (Child Pornography) குழந்தையைப் பயன்படுத்துதல் ஆகிய முக்கிய குற்றங்கள் முதன் முறையாக இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**36. கடுமையான பாலியல் குற்றங்கள் என்று போக்சோ சட்டம் எதனை குறிக்கிறது ?**

இச்சட்டத்தில், சில குற்றங்கள் 'கடுமையானதாக'' (Aggravated) கருதப்பட்டுள்ளது. இவை, நம்பகத்தன்மையில் உள்ளோர், பொறுப்புரிமை அமைப்பில் உள்ளவர்கள் குழந்தைகள் இல்ல காப்பாளர்கள், காவல் அலுவலர், பாதுகாப்பு படையினர் மற்றும் பொது ஊழியர் போன்றோரால் இழைக்கப்படுபவை.

மேலும்

- குழந்தையுடன் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து உட்புகுத்தி பாலியல் வன்புணர்ச்சி செய்தல்,
- பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு எயிட்ஸ் உள்ளிட்ட கொடிய நோய் பரவினால்,
- குழந்தை கற்பமுற்றிருப்பது தெரிந்து வன்புணர்ச்சி செய்தல்,
- வல்லுறவு செய்து குழந்தையை கொல்ல முயற்சித்தல்,
- குழந்தை உடல் அல்லது மனவளர்ச்சி குன்றியவராக இருப்பதை சாதகமாக பயன்படுத்தி வல்லுறவு செய்தல்,




பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரை சந்திக்க வாய்ப்பளிக்கக் கூடாது.

- ஏற்கனவே பாலியல் குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்றவராக இருந்தால் என மேற்ச்சொன்ன குற்றங்கள் 'கடுமையானதாக'' (Aggravated) கருதப்பட்டுள்ளது. (போக்சோ சட்டம் பிரிவு 5 )

## 37. ஒரு குழந்தை பாலியல் வன்முறைக்கு உள்ளாகியிருப்பது தெரிந்து அதனை நான் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்லாவிட்டால் எனக்கு தண்டனை உண்டா?

குழந்தை மீதான பாலியல் வன்முறை பற்றிய தகவல் உள்ளவர்கள் கண்டிப்பாக காவல் துறையில் புகாரளிக்க வேண்டும் (Mandatory Reporting). தவறினால் ஆறு மாத சிறை என்கிறது போக்சோ சட்ட பிரிவு 19 மற்றும் 21

## 38. குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக்கு அனைத்திற்கும் ஒரே விதமான தண்டனையா?

இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு, அதன் கடுமைக்கு ஏற்ப பலவித தண்டனைகள் கூறப்பட்டுள்ளன. இத்துடன் அபராதம் விதிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில், சில குற்றங்கள் 'கடுமையானதாக'' (Aggravated) கருதப்பட்டுள்ளது. இவை, நம்பகத்தன்மையில் உள்ளோர், பொறுப்புரிமை அமைப்பில் உள்ளவர்கள் குழந்தைகள் இல்ல காப்பாளர்கள், காவல் அலுவலர், பாதுகாப்பு படையினர் மற்றும் பொது ஊழியர் போன்றோரால் இழைக்கப்படுபவை.

## 39. குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதும் தண்டனைக்குறிய குற்றமா?

குற்ற உடந்தையும், குற்றத்தை புரியவதற்கான முயற்சியும் வரையறுக்கப்பட்டு அவற்றிற்கான தண்டனையும் கூறப்பட்டுள்ளது. (பிரிவு 16-18).

## 40. குழந்தை தன் மீது பாலியல் வன்முறை நிகழ்ந்ததாக குற்றம் சாட்டும் போது அதனை நிரூபிக்கும் பொறுப்பு யாருடையது?

இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள சில கடுமையான குற்றங்களில் மெய்ப்பிக்கும் சுமையானது (Burden of Proof) குற்றம் சாட்டப்பட்டவரின் பேரில் சுமத்தப்பட்டுள்ளது. இது குழந்தையின் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலை (Vulnerability) மற்றும் கபடமற்றத்தன்மை (Innocence) ஆகியவற்றை கருத்தில் கொண்டு செய்யப்பட்டதாகும்.

### 41. குழந்தை மீது பாலியல் வன்முறை நடந்துள்ளதாக பொய்யான புகாரளித்தால் தண்டனை உண்டா?

ஒரு குழந்தைக்கு எதிராக, அது பொய்யானது என அறிந்தே குழந்தையையோ அல்லது வேறொரு நபரையோ பழி வாங்க ஒரு பொய்யான புகார் அல்லது தவறான தகவல் அளிக்கும் குழந்தையல்லாத நபருக்கு தண்டனையளிக்க பிரிவு 22 இன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், ஒரு குழந்தையினால் ஒரு பொய்யான புகார் அல்லது தகவல் அளிக்கப்படும் போது, அத்தகைய குழந்தை மீது எந்த தண்டனையையும் சுமத்த முடியாது. பிரிவு 22(2)

### 42. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தையின் அடையாளத்தை வெளியிடலாமா?

குழந்தையின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய எந்த விவரத்தையும் ஊடகங்கள் சிறப்பு நீதிமன்ற அனுமதியின்றி வெளியிட பிரிவு 23 இல் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கான தண்டனையும் அதில் கூறப்பட்டுள்ளது.

### 43. பாலியல் வன்முறையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் வழக்குகளை முடிக்க கால வரையறை உண்டா?

விரைவான தீர்வு காண, சாட்சியத்தை பதிவு செய்யப்படுவதற்கான கால அளவு முப்பது நாட்கள் எனவும், விசாரணையை நிறைவு செய்ய ஓராண்டு காலம் எனவும் கால அளவு, பிரிவு 35 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரைவான விசாரணைக்கு வழிவகுக்கும் வகையில் இச்சட்டத்தில் கூறப்பட்டு இருக்கும் குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு விசாரணை நீதிமன்றங்கள் அமைக்க பிரிவு 28 இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.




வழக்கு விசாரணை குழந்தைகள் நீதிமன்றத்தில் (தமிழகத்தில் பெண்கள் நிதிமன்றங்களே குழந்தைகள் நீதிமன்றங்களாக செயல்படுகின்றன) நடைபெற வேண்டும்.

இச்சட்டத்தின் விதிகளின் கீழ் உரிய இடைக்கால இழப்பீடு மற்றும் இறுதி இழப்பீடு கிடைக்கவும் அதற்கான கால அளவும் கூறப்பட்டுள்ளன.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அந்த குழந்தை பருவத்தினை பாதுகாப்பது நம் கடமை.

## 44. பாலியல் வன்முறையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் குழந்தை நேய நடைமுறைகள் என்னென்ன உள்ளன?

1. சாட்சியம் அளிக்கும் வேளையில் குற்றம் சாட்டப்பட்டவரை குழந்தை பார்த்தல் கூடாது என பிரிவு 36 இல் உரைக்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தையின் வாக்கு மூலத்தை காணொளி பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.
    - பாலியல் குற்றங்கள் குறித்த வழக்குகள் தனி அறைக்குள் (In Camera) நடத்தப்படவேண்டும் என் பிரிவு 37 வலியுறுத்துகிறது.
2. குழந்தையின் விருப்புரிமையின்படி சட்ட ஆலோசகரின் சட்ட உதவி பெற, குழந்தைக்கு உரிமையுண்டு (பிரிவு 40).
3. சில குற்றங்கள் குறித்தும், குற்றமுறு மனநிலை (Culpable mental state) பற்றியும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமானம் (Presumption) மேற்கொள்ள பிரிவு 29 மற்றும் பிரிவு 30 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
4. குழந்தையின் விவர அறிக்கையானது (Statement) அவர் வசிக்கும் உறைவிடத்தில் அல்லது அவரது விருப்பத்திற்குரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும். பிரிவு 24(1).
5. அது ஒரு துணை காவல் ஆய்வாளரின் படிநிலைக்குக் குறையாத பெண் காவல் அலுவலரால் பதிவு செய்யப்பட வேண்டும். 24(1)
6. அப்போது காவல் அலுவலர் சீருடையில் இருக்கக் கூடாது. 24(2)



7. எக்காரணத்தின் பேரிலும், குழந்தையை இரவு நேரத்தில் காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்தல் கூடாது. 24(4)

8. குழந்தையின் விவர அறிக்கையானது அவர் கூறியவாறு பதிவு செய்யப்பட வேண்டும். 25(1)

9. அந்த விவர அறிக்கையானது பெற்றோர் போன்றோர்களின் முன்னிலையில் பதிவு செய்யப்பட வேண்டும். 26(1)

10. தேவைப்படும் போது வல்லுநரின் உதவியை நாட வேண்டும். 26(3)

11. பாலியால் வன்முறையில் பாதிக்கப்பட்டவர் (Victim) பெண் குழந்தையாக இருக்கும் வேளையில் மருத்துவ ஆய்வானது பெற்றோர் முதலியவர்களின் முன்னிலையில் ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்படல் வேண்டும். 27(2)(3)

12. ஒரு வேளை பெண் மருத்துவர் இல்லாத சூழலில் ஆண் மருத்துவர் குழந்தையின் நம்பிக்கைக்குறிய பெண் உறவினரின் துணையோடு ஆய்வு செய்யலாம்

13. வழக்கின் விசாரணையின் போது விசாரணை அலுவலர் (அ) சிறப்பு நீதிமன்றம் அடிக்கடி இடைவேளைகள் (Breaks) அனுமதிக்கலாம். பிரிவு 33(3)

14. நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க திரும்ப திரும்ப அழைக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பிரிவு 33(5)

15. கடுமையான வினா தொடுப்பதை அல்லது குழந்தையின் பண்பு நலனை (Character) பழிப்பதை அனுமதிக்கக் கூடாது. பிரிவு 33(6)

16. வழக்கு விசாரணை தனி அறையில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் முன்னிலையில் நடத்தப்படல் வேண்டும். பிரிவு 37

17. பொது மக்களிடையே இச்சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் அளிக்கப்படுதல் மற்றும் இச்சட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளித்தல் மைய மாநில அரசுகளின் கடமையாகும். (பிரிவு 43).

18. இச்சட்டத்தின் செயல்பாடுகளை இடையறாது கண்காணிக்க வேண்டும் என்றக் கடப்பாடு பிரிவு 44 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பு தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் குழந்தை நேய நடைமுறைகளில் குழந்தையின் நலனே தலையானது, இச்சட்டத்தில் நீதிமுறையிலான நடவடிக்கையிலும் மற்றும் அதற்கு முன்னரான நடவடிக்கைகளிலும் விவர அறிக்கை அளித்தல், புலன் விசாரணை மற்றும் வழக்கு விசாரணை ஆகிய முக்கிய நிலைகளில் குழந்தை நேய நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

### 45. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை பற்றி தகவல் பெறப்பட்டவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டியது அவசியமா?

- தகவல் பெறப்பட்டவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தையிடம் புகார் வாங்க வேண்டிய அவசியமில்லை. குழந்தை பாதிக்கப்பட்டதாக தகவல் உள்ள யார் வேண்டுமானாலும் காவல் துறையிடம் புகார் செய்யலாம்.
    - முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுப்பது சட்டப்படி குற்றமாகும்.
    - காவல் நிலைய எல்லைக்காக புகார் பெறுவதை தவிர்க்காமல் குற்றவியல் நடைமுறை சட்டம் (CrPC) (154ன் படி) Zero FIR பதிவு செய்து உரிய காவல் நிலையத்திற்கு மாற்ற வேண்டும்.
- மேலதிக தகவல்கள் பெற பாதிக்கப்பட்ட குழந்தையை காவல் நிலையத்திற்கு அழைக்காமல் குழந்தை பாதுகாப்பாக உணரும் இடத்தில் (வீடு, குழந்தை தங்கியிருக்கும் இடம் உள்ளிட்ட இடங்கள்) விசாரிக்கலாம்.
    - குழந்தை நல காவல் அலுவலர் (அ) குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவை சார்ந்த அலுவலர் மட்டுமே குழந்தையை விசாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்டது பெண் குழந்தையெனில் பெண் அலுவலரே விசாரிக்க வேண்டும்.
    - மனவளர்ச்சி குன்றிய, மாற்றுதிறனாளி குழந்தை அல்லது பிற மொழி குழந்தையெனில் அவர்களுடன் உரையாட பயிற்சி பெற்றவர்களின் உதவியை நாடலாம்.
    - மீண்டும் மீண்டும் குழந்தைக்கு நடந்த வன்முறையை பேசவைப்பதற்கு பதில் விசாரணையை காணொளி பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

### 46. குழந்தையை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்ற குறிப்பாணை அவசியமா?

உடனடியாக (தகவல் பெற்ற 24 மணி மிகாமல்) குழந்தையை மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு தாமதிக்காமல் அனுப்பிட வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைக்கு தாமதிக்காமல் இலவச மருத்துவ உதவி வழங்குவது மருத்துவமனையின் (அரசு மற்றும் தனியார்) கடமை. அதற்கு விசாரணை அதிகாரியின் குறிப்பாணை (Memo) போதுமானது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க வேண்டிய அவசியமில்லை.

குழந்தைகள் என்ன தவறு செய்தார்கள் என்பதை விட அதை செய்ய வைத்த சூழலை மாற்றுவதே சிறந்தது.

### .47. குழந்தையின் வாக்குமூலத்தினை யார் பதிவு செய்ய வேண்டும்?

குழந்தையின் வாக்குமூலத்தினை நீதிபதியால் இதச. 164 (5A) (a) குநச ( 154 (1) (c) படி பதிவு செய்யப்பட வேண்டும். அதனை காணொளி பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

நீதிமன்ற அறையில் அல்லாமல் நீதிபதியின் அறை அல்லது குழந்தை நேய இடத்தில் இந்த வாக்குமூலத்தினை பதிவு செய்ய வேண்டும்.

### 48. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை, குழந்தை நலக் குழுமத்தின் (CWC) முன் ஆஜர்படுத்தப்பட வேண்டுமா?

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு பாதுகாப்பாக பொறுப்புள்ள தாய் தந்தையர் அல்லது பாதுகாவலர்கள் இருந்தால், குழந்தையின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் பொருப்பினை அவர்கள் உணர்ந்திருந்தால், குழந்தையினை குழந்தை நலக் குழுமத்தின் முன் ஆஜர்படுத்த வேண்டிய அவசியமில்லை.

பெற்றோர் அல்லது குடும்பத்தினரால் குழந்தைக்கு பாதுகாப்பில்லை எனில் குழந்தையை குழந்தை நலக் குழுமத்தின் முன் ஆஜர்படுத்த வேண்டும்.

- பாதுகாப்பும் அக்கறையும் தேவைப்படும் குழந்தையெனில்
- பாதுகாப்பான தங்குமிடம் அல்லது அதரவான நபர் (சமூகப்பணியாளர்) தேவைப்பட்டால் அதனை குழந்தை நலக் குழுமம் உறுதி செய்ய வேண்டும்.
- இலவச சட்ட உதவியும், உரிய இழப்பீடும் குழந்தைக்கும் பெற்றோருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 49. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரை சந்திக்கலாமா?

- விசாரணை காலத்தில் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரை சந்திக்காமல் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்
- பாதுகாப்பான தங்குமிடம் அல்லது அதரவான நபர் (சமூகப்பணியாளர்) தேவைப்பட்டால் அதனை குழந்தை நலக் குழுமம் உறுதி செய்ய வேண்டும்.
- இலவச சட்ட உதவியும், உரிய இழப்பீடும் குழந்தைக்கும் பெற்றோருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

## 50. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2009ன் கீழ் குற்றங்செயல்களும் அதற்குறிய தண்டனைகளும் என்ன?

### குற்றங்செயல்களும் அதற்குறிய தண்டனைகளும்

| குற்றச் செயல்கள் | அதிகபட்ச தண்டனை |
|---|---|
| உட்புகத்தி பாலியல் வல்லுறவு (பிரிவு 3) | ஆயுள் தண்டனை (பிரிவு 4) |
| கடுமையான உட்புகத்தி பாலியல் வல்லுறவு (பிரிவு 5) | ஆயுள் தண்டனை (பிரிவு 6) |
| பாலியல் தாக்குதல் (பிரவு 7) | 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை (பிரிவு 8) |
| கடுமையான பாலியல் தாக்குதல் (பிரிவு 9) | 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை (பிரிவு10) |
| பாலியல் துன்புறுத்தல் (பிரிவு 11) | 3ஆண்டுகள் வரை சிறை தண்டனை (பிரிவு12) |
| ஆபாச காட்சிகளுக்கு குழந்தைகளை பயன்படுத்துதல் (பிரிவு 13) | 5ஆண்டுகள் வரை சிறை தண்டனை மறுபடியும் குற்றமிழைத்தால் 7வருடம் (பிரிவு14) |
| ஆபாச காட்சிகளுடன் உட்புகுத்தி பாலியல் வல்லுறவுக்கு (விதி 14(2) ) | கடுங்காவல் ஆயுள் தண்டனை (பிரிவு 15) |
| கடுமையான ஆபாச காட்சிகளுடன் கூடிய உட்புகுத்தி பாலியல்வல்லுறவுக்கு (பிரிவு 14(3) ) | கடுங்காவல் ஆயுள் சிறை (பிரிவு 15) |
| ஆபாச காட்சிப்படுத்தலுடன் கூடிய பாலியல் தாக்குதல் (பிரிவு 14 (4)) | எட்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை (பிரிவு 15) |
| கடுமையான ஆபாச காட்சிப்படுத்தலுடன் கூடிய உட்புகுத்தி பாலியல் தாக்குதல் (பிரிவு 14(5) ) | பத்தாண்டுகள் சிறை (பிரிவு 15) |
| குழந்தைகள் மீது பாலியல் குற்றமிழைக்க முயற்சித்தல் பிரிவு(18) | ஆயுள் தண்டனையில் பாதி (பிரிவு 18) |



## காணாமல் போகும் மற்றும் மீட்கப்படும் குழந்தைகள்

### 51.காணாமல் போன குழந்தைகள் சார்ந்த புகார்கள் வரும் போது செய்ய வேண்டியது என்ன?

இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்ட காணாமல் போன குழந்தைகளை மீட்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை (Standard Operating Procedure for cases of Missing Children) பட்டியலிட்டுள்ளது.

குழந்தை காணாமல் போனதாக தகவல் கிடைத்தால்

- குழந்தை காணாமல் போனதாக தகவல் கிடைத்தவுடன் அதனை புகாராக பதிவு செய்யவேண்டும்
- காணாமல் போன குழந்தைப் பற்றிய தகவல்களை குழந்தை நல காவல் அலுவலருக்கும் குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவிற்கும் தெரிவிக்க வேண்டும்.
- குழந்தை பற்றிய தகவல்கள் மற்றும் புகைப்படங்களை சேகரித்து http://www.trackthemissingchild.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- உடனடியாக காவல் கட்டுப்பாட்டறைக்கு தெரிவித்து மற்ற காவல் நிலையங்களுக்கு தகவலை பகிர வேண்டும்
- விசாரணை அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்
- காணாமல் போனவர்கள் தகவல் படிவத்தினை Form M (Missing Persons Information Form) நிறைவு செய்து மாவட்ட, மாநில மற்றும் தேசிய குற்ற ஆவன காப்பகத்திற்கும் மற்றும் சிபிஐ, தொடர்வண்டி பாதுகாப்பு படை உள்ளிட்டவற்றுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- பொது தொடர்பு சாதனங்கள் உள்ளிட்டவற்றின் உதவியுடன் குழந்தை பற்றிய தகவலை பரவலாக்க வேண்டும்.
- நான்கு மாதங்களுக்குள் குழந்தை கிடைக்கப் பெறாவிட்டால் வழக்கு மனித கடத்தல் தடுப்பு பிரிவுக்கு (Anti Human Trafficking Unit) மாற்றப்பட வேண்டும்.
- குழந்தை கிடைக்கும் வரை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தகவல் அனுப்பப்பட வேண்டும்.
- ஒருவேளை குழந்தை கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச் செயலாக இருக்கும் என சந்தேகம் இருந்தால் சிறப்பு விசாரணை குழுக்கள் அமைத்து புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

**குழந்தை கிடைத்ததாக தகவல் கிடைத்தால்**

- குழந்தை கிடைத்ததாக தகவல் கிடைத்தவுடன் குழந்தையை மீட்டு குழந்தை நலக் குழுமம் (அ) இளஞ்சிறார் நீதிக் குழுமம் (அ) குழந்தைகள் நீதி மன்றத்தில் (வழக்கின் தன்மைக்கேற்ப) முன் நிறுத்தி உரிய ஆணைகளை பெற வேண்டும்.

- குழந்தை உடனடியாக மருத்துவ பரிசோதனைக்கும் தேவைப்பட்டால் சிகிச்சைக்கும் அனுப்ப வேண்டும். உளவியல் உதவிக்கும் வழி செய்ய வேண்டும்

.

- குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் சரியான விசாரணைக்கு பிறகு குழந்தை நலக் குழுமத்தின் ஆணையின் பெயரில் ஒப்படைக்க வேண்டும்.

- மீட்கப்பட்ட குழந்தை பற்றிய தகவல்கள் மற்றும் புகைப்படங்களை சேகரித்து http://www.trackthemissingchild.gov.in என்ற இணையதளத்தில் மீட்கப்பட்டவர்கள் பற்றிய தகவல் படிவத்தினை Form R (Recovery Form) நிறைவு செய்து மாவட்ட, மாநில மற்றும் தேசிய குற்ற ஆவண காப்பகத்திற்கும் மற்றும் சிபிஐ, தொடர்வண்டி பாதுகாப்பு படை உள்ளிட்டவற்றுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

- குழந்தைக்கும் குடும்பத்திற்கும் வழிகாட்டல், மறுவாழ்வு உள்ளிட்ட சேவைகளை வழங்க மாவட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு தகவல் அளிக்க வேண்டும்.

- காணாமல் போன நேரத்தில் குழந்தை தீங்கிழைத்தலுக்கு உள்ளாகியிருந்தால் அதற்குறிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

**52. ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம்** (Integrated Child Protection Scheme ICPS) **ஏன்?**

குழந்தைகளின் உரிமைகளை உறுதி செய்வது அரசின் கடமையாகும். குழந்தைகளின் நலவாழ்வை உறுதி செய்ய பெற்றோர்களோ அல்லது அவர்களின் பொறுப்பாளர்களோ தவறும் போது அந்த பொறுப்பினை அரசு ஏற்க வேண்டும் என்கிறதுஇந்திய அரசு ஏற்றுக்கொண்ட ஐ. நா. குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை.

இந்த கடமையினை நடைமுறைப்படுத்தும் விதமாக இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 2009ல் கொண்டு வரப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் (Integrated Child Protection Scheme ICPS) கொண்டுவரப்பட்டது.

இந்த ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் மூலமாக தேசிய, மாநில, மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நடைமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**53. ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகள் என்னென்ன?**

**தேசிய அளவில்**

- இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
- மத்திய திட்ட செயலாக்க அலகு (Central Project Support Unit)
- சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் (Childline India Foundation)
- குழந்தை மேம்பாடுமற்றும் பொது ஒருங்கிணைப்புகான தேசிய நிறுவனம் (National Institute for Public Cooperation and Child Development – NIPCCD)
- தத்தெடுத்தலுக்கான மத்திய வள மையம் (CARA – Central Adoption Resource Agency)

**மண்டல அளவில்**

- சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் மண்டல அளவிலான வள மையங்கள் (Childline India Foundation Regional Resource Centres)

- குழந்தை மேம்பாடு மற்றும் பொது ஒருங்கிணைப்புகான தேசிய நிறுவனத்தின் மண்டல மையங்கள் (Regional Centres of National Institute for Public Cooperation and Child Development – NIPCCD)

**மாநில அளவில்**

- மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் (State Child Protection Society)
- தத்தெடுத்தலுக்கான மாநில வள மையம் (SARA – State Adoption Resource Agency)

**மாவட்ட அளவில்**

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit)
- சைல்டு லைன் மாவட்ட அமைப்புகள் (Childline Nodal, Collab and Sub Centres)
- குழந்தை நலக் குழுமம் (Child Welfare Committee)
- இளஞ்சிறார் நீதிக் குழுமம் (Juvenile Justice Board)

**வட்டார மற்றும் கிராம அளவில்**

- வட்டார குழந்தை பாதுகாப்பு குழு (Block level Child Protection Committees)
- கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் (Village level Child Protection Committees)

## 54. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பணிகள் என்ன ?

- குழந்தை பாதுகாப்பிற்கான மைய மற்றும் மாநில அரசுகளின் சட்டங்கள், திட்டங்கள், செயல்முறைகள் உள்ளிட்டவற்றை நடைமுறைப்படுத்தல்

- மாவட்டத்திலுள்ள அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் சமூக ஒன்றிணைதலுக்கு தேவையான தனிநபர் செயல்திட்டத்தினை உருவாக்கி தொடர்ந்து கண்காணித்து வருதல்

- அங்கன்வாடி மையங்கள், சமூக நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தத்தெடுப்புக்கான சிறப்பு நிறுவனங்களோடு இணைந்து தீங்கிழைத்தல் மற்றும் பிரச்சனைகளுக்கு உள்ளாக வாய்ப்புள்ள குழந்தைகளை கண்டறிந்து பாதுகாப்பளித்தல்.

- இளஞ்சிறார் நீதி சட்டம் 2015 ஐ நடைமுறைப்படுத்திட தேவையான கட்டமைப்புகளை உருவாக்கிட சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்.

    - எ.கா. குழந்தை நலக் குழுமம் (CWC), இளஞ்சிறார் நீதிக் குழுமம் (JJB), குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு (SJPU), குழந்தை நல காவல் அலுவலர் (CWPO)

- குழந்தை பாதுகாப்பினை மாவட்ட அளவில் உறுதி செய்திட மாவட்டத்தில் செயல்பட்டு வரும் சமூக மற்றும் மக்கள் அமைப்புகள், பணிக் குழுக்கள், குழந்தைகள் இல்லங்கள், அரசு துறை நிறுவனங்களுக்கு இடையில் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

நமது செயல்கள் குழந்தைக்கு மறுவாழ்வளிக்கவும், சமூகத்தோடு சக மனிதனாக உள்ளிணையவும் உதவிடும் வகையில் அமையவேண்டும்.

- குழந்தை உரிமைகளை உறுதி செய்யும் பொறுப்புள்ள அரசு துறைகளான சமூக நலத்துறை, குடும்ப நலவாழ்வு துறை, பொது சுகாதார துறை, கல்வி துறை, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சிறுபான்மையினர் நலம், தொழிலாளர் நலத்துறை, நீதித்துறை, காவல் துறை உள்ளிட்ட துறைகளோடு இணைந்து மாவட்ட அளவில் குழந்தைகளின் உரிமைகள் உறுதி செய்யப்படுவதை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட அரசின் குழந்தை உரிமைகளை உறுதி செய்திடும் பல்வேறு பணிகளை உள்ளடக்கியது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பணி.

### 55. மாவட்ட அளவில் குழந்தை பாதுகாப்பிற்காக உள்ள அமைப்புகள் யாவை?

1. குழந்தை நலக் குழமம்
2. இளஞ்சிறார் நீதிக் குழமம்
3. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit)
4. சைல்டு லைன் மாவட்ட அமைப்புகள் (Childline Nodal, Collab and Sub Centre)
5. நன்னடத்தை அலுவலர் – அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளின் குடும்ப சமூக சூழல்களை ஆய்வு செய்து குழந்தை நலக் குழுமம் மற்றும் இளஞ்சிறார் நீதிக் குழுமங்கள் குழந்தைகள் மீது முடிவெடுக்க உதவுதல்
6. மாவட்ட குழந்தை திருமண தடுப்பு அலுவலர் (சமூக நலத்துறை)
7. தொழிலாளர் ஆய்வாளர்கள் - தொழில் நிறுவனங்கள், வீடுகள் மற்றும் பிற இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள குழந்தைகளை மீட்க.
8. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்
9. வரவேற்பு இல்லங்கள் - அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் உடனடி தேவைக்கு அரசு அல்லது அரசின் உதவிப் பெற்ற தொன்டு நிறுவனங்கள் நடத்தும் குழந்தைகள் இல்லங்கள். இங்கே குழந்தை நலக் குழுமத்தின் உத்தரவில்லாமல் எந்த குழந்தையும் தங்க வைக்கப்படக்கூடாது.
10. குழந்தைகள் இல்லங்கள் - அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் நீண்ட கால தேவைக்கு அரசு அல்லது தனியார் தொன்டு நிறுவனங்கள் நடத்தும் குழந்தைகள் இல்லங்கள். இங்கே குழந்தை நலக் குழுமத்தின் உத்தரவில்லாமல் எந்த குழந்தையும் தங்க வைக்கப்படக்கூடாது.
11. கூர்நோக்கு இல்லங்கள் - சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளின் உடனடி பாதுகாப்புக்கு
12. சிறப்பு இல்லங்கள் - சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளின் நீண்ட கால மறுவாழ்வுக்கு.

என பல அமைப்புகள் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக செயல்பட்டு வருகின்றன.

## குழந்தை பாதுகாப்பு அமைப்புகளின் தொடர்பு எண்கள்

| வ.எண் | குழந்தை பாதுகாப்பு அமைப்புகள் | தொடர்பு எண் |
|---|---|---|
| 1 | குழந்தை நலக் குழுமம் | |
| | | |
| | | |
| | | |
| | | |
| 2 | இளஞ்சிறார் நீதிக் குழுமம் | |
| | | |
| | | |
| 3 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit) | |
| 4 | சைல்டு லைன் மாவட்ட அமைப்புகள் (Childline Nodal, Collab and Sub Centre) | |
| | | |
| | | |
| 5 | நன்னடத்தை அலுவலர் | |
| 6 | மாவட்ட குழந்தை திருமண தடுப்பு அலுவலர் (சமூக நலத்துறை) | |
| 7 | தொழிலாளர் ஆய்வாளர்கள் | |
| 8 | தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் | |
| 9 | வரவேற்பு இல்லங்கள் | |
| 10 | குழந்தைகள் இல்லங்கள் | |
| | | |
| | | |
| 11 | கூர்நோக்கு இல்லங்கள் | |
| 12 | சிறப்பு இல்லங்கள் | |




**2017 டிசம்பர் 27 அன்று குழந்தை நல காவல் அலுவலர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி தொடக்க விழாவின் சிறப்பு விருந்தினர்களும் ஒருங்கிணைத்தவர்களும்**



**மாண்புமிகு நீதியரசர் திரு மணிக்குமார் அவர்கள் குழந்தை நல காவல் அலுவலர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.**

குழந்தைகளை பாதுகாத்தல் அனைவரின் கடமை

## இலயோலா குழந்தை பாதுகாப்பிற்கான அறிவுசார் வள ஆதார மையம்

இலயோலா குழந்தை பாதுகாப்பிற்கான அறிவுசார் வள ஆதார மையம், இலயோலா கல்லூரியின் சமூகப்பணி துறையின் ஒரு அங்கமாகும். குழந்தை பாதுகாப்பு சார்ந்த ஆற்றல் மேம்பாட்டிற்கான பயிற்சிகள் மற்றும் சான்றிதழ் படிப்புகள், கொள்கை ஆய்வுகள், விழிப்புணர்வு கருவிகள் போன்றவற்றை உருவாக்கி வளமாக்கவும், குழந்தை பாதுகாப்பிற்காக செயல்படும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு வள ஆதார மையமாகவும் ஒருங்கிணைப்பிற்கான தளமாகவும் உருவாகிடும் நோக்கோடு இம்மையம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு காவல் துறையின் குழந்தை நேய காவல் பணி முயற்சிக்கு யூனிசெப் நிறுவனத்தோடு இலயோலா குழந்தை பாதுகாப்பிற்கான அறிவுசார் வள ஆதார மையம் இணைந்து தோள் கொடுக்கிறது.

குழந்தை பாதுகாப்பு சார்ந்த உங்களது உதவிக்கு எங்களை அணுக...

Prof. Andrew Sesuraj. M
Loyola Knowledge Hub for Excellence in Child Protection
Loyola KHEChP
Dept of Social Work, Loyola College, Chennai
Cpknowledgehub.loyola@gmail.com
044 28178473 Mobile 9444020563